இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 22 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 14 – வியாழக்கிழமை 31 ஆகஸ்ட் 2023 – திருச்சி ★★ 12 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 22: Thiruvalluvar Year - 2054 - Aavani 14 - Thursday 31 August 2023 - Trichy ★★ 12+8 Pages ₹ 5.00


## காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவை ஏற்க முடியாது ! தமிழ்நாடு அரசு சார்பில்

# செப்.1 - உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.08.2023) தலைமைச் செயலகத்தில், இங்கிலாந்து நாட்டின் அமஸ்பரி (Amesbury) மேயரான தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்ட டாக்டர் சாருலதா (எ) மோனிகா தேவேந்திரன் சந்தித்துப் பேசினார். அவரது பெற்றோர் தேவேந்திரன், திருமதி கீதா தேவேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேட்டி!

**சென்னை, ஆக. 31 -**

**நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறுகையில், காவிரி ஆணையத்தின் உத்தரவை ஏற்க முடியாது எனவும்,குறுவை சாகுபடி பயிரைக் காப்பாற்ற தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய காவிரி நீரை கர்நாடக அரசு உடனடியாக வழங்க உத்தரவிடக் கோரி, தமிழ்நாடு அரசு சார்பில் செப்டம்பர் 1-ஆம் தேதி உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.**

அதன் விவரம் வருமாறு:-

காவிரி மேலாண்மை ஆணையத்தின் கூட்டம் நேற்று முன்தினம் (29.08.2023) பிற்பகல் நடைபெற்றது.

தமிழ்நாட்டுக்கு ஜூன், ஜூலை மாதத்தில் திறந்துவிட வேண்டிய 28 டி.எம்.சி நீர், ஆகஸ்ட் மாதத்துக்கான 45 டி.எம்.சி. நீர் கர்நாடகாவால் முழுமையாகத் திறந்து விடப்படாமல் உள்ளது.

இதுவரை நிலுவையில் உள்ள 54 டி.எம்.சி. நீரை அடுத்த 15 நாட்களுக்குள் திறந்துவிட வேண்டும். அதற்கு ஏற்ப வினாடிக்கு 24,000 கன அடி தண்ணீர் திறக்க வேண்டும் என காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் தமிழ்நாடு அரசு கோரிக்கை வைத்தது. இதுதவிர செப்டம்பர் மாதத்துக்கான 36.76 டி.எம்.சி தண்ணீரையும் உரிய நேரத்தில் திறந்து விடவும் வலியுறுத்தியுள்ளது. நேற்று முன்தினம் கூட்டத்தில் தமிழ்நாட்டுக்கு கூடுதல் தண்ணீர் திறக்க காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

### அமைச்சர் துரைமுருகன் பேட்டி!

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை செய்தியாளர்களைச் சந்தித்த நீர்வளத் துறைஅமைச்சர்துரைமுருகன், “காவிரி மேலாண்மை ஆணையம் நாங்கள் சொன்னதை ஏற்றுக் கொள்ளவில்லை, ஆகையால் வேறுவழி கிடையாது, மறுபடியும்உச்சநீதிமன்றத்தை அணுக வேண்டியதுதான் எங்களுக்குள்ள ஒரே வழி. செப்.1 அன்று உச்சநீதிமன்றத்தில் மேல்முறை யீடு செய்வோம்” என்று கூறினார்.

**காவிரி மேலாண்மை ஆணையம்நேற்றுமுன்தினம் புதுடெல்லியில் கூடிய நிலையில் சென்னையில் நீர்வளத் துறைஅமைச்சர்துரைமுருகன் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-**

காவிரி ஒழுங்காற்றுக் குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் காவிரியில் 5 ஆயிரம் கன அடி



தண்ணீரை 15 நாட்களுக்கு திறந்து விடும்படி அந்தக் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. ஆனால் அது போதாது என்று நாம் சொல்லி உள்ளோம்.

எனவே இன்றைக்கு (நேற்று) முன்தினம் காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டம் நடந்தது. அதில் தமிழக அரசின் நீர்வளத்துறைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, காவிரி தொழில் நுட்பக் குழுத் தலைவர் சுப்பிரமணியம் ஆகிய இருவரும் கலந்து கொண்டனர்.

அவர்கள் தமிழகத்தின் கோரிக்கையை வற்புறுத்தினர். வினாடிக்கு 24,000 கன அடி தண்ணீர் வழங்கினால் தான் பயிர்கள் காயாமல் இருக்கும் என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறினர்.

கர்நாடக முதல்வர் சித்தராமையா, அணைகளில் போதுமான தண்ணீர் இல்லை என்று கூறி உள்ளார். காவிரி மேலாண்மை ஆணையம் நாங்கள் சொன்னதை ஏற்றுக் கொள்ளவில்லை. காவிரி ஒழுங்காற்றுக் குழு கூறியதைத்தான் காவிரி மேலாண்மை ஆணையம் ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆகையால் எங்களுக்கு வேறுவழி கிடையாது. மறுபடியும் உச்சநீதிமன்றத்தை அணுக வேண்டியதுதான். வரும் வெள்ளிக்கிழமை உச்சநீதிமன்றத்தில் வழக்கு வருகிறது. அன்றைக்குத் தெரிவிப்போம். அவர்களுக்கு தண்ணீர் வேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள்.

எங்களுக்கு தண்ணீர் வேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம். குறைந்தது வினாடிக்கு 24,000 கனஅடி நீர் திறக்க வேண்டும் என்று கேட்கிறோம். அவர்கள் வினாடிக்கு 5,000 கன அடி தண்ணீர் 15 நாட்களுக்கு வரும் என்று கூறுகிறார்கள்.

அதனால்தான் நாங்கள் நீதி மன்றத்துக்குச் சென்றிருக்கிறோம். வெள்ளிக்கிழமை வழக்கு வருகிறது. குறுவை சாகுபடி மோசமான நிலையில் உள்ளது. கர்நாடகா 45 டி.எம்.சி. தண்ணீர் தராமல் நிலுவையில் வைத்துள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் கூறினார்.

## நிலவின் தென்பகுதியில் ஆக்சிஜன், அலுமினியம், கால்சியம்! ரோவர் உறுதி!

சென்னை, ஆக.31–

நிலவில் தென்துருவத்தில் ஆக்சிஜன், அலுமினியம், கால்சியம் இருப்பதை ரோவர் விண்கலம் உறுதி செய்துள்ளதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள இஸ்ரோ, சல்ஃபர், இரும்பு, குரோமியம், சிலிக்கான், டைட்டானியம், மாங்கனீசு உள்ளிட்டவை இருப்பதை ரோவர் உறுதி செய்துள்ளது.

லேசர் ஸ்பெக்ட்ரோஸ்கோப் கருவி மூலம் ரோவர் நிலவில் உள்ள தனிமங்களை கண்டறிந்ததாக இஸ்ரோ தகவல் தெரிவித்துள்ளது.

நிலவின் தென் துருவப் பகுதி குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக, ஜூலை 14 ஆம் தேதி எல்.வி.எம். மாக்3 ராக்கெட் மூலம் அனுப்பிய சந்திரயான் 3 விண்கலம் திட்டமிட்டபடி ஆக. 23 மாலை 6.04 மணியளவில் நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

லேண்டரில் அனுப்பப்பட்ட பிரக்யான் ரோவர் வெற்றிகரமாக வெளியே வந்து நிலவின் மேற்பரப்பை ஆய்வு செய்யும் பணியை மேற்கொண்டு வருகிறது.

சந்திரயான் 3 விண்கலத்தின் லேண்டர் விக்ரம் மற்றும் ரோவர் பிரக்யான் ஆகியவற்றின் செயல்பாடுகளை தொடர்ந்து இஸ்ரோ வெளியிட்டு வருகிறது.

## பரனூர் சுங்கச்சாவடி நவீன ஊழலின் அடையாளம்!

# வாகனங்களுக்கு கட்டணம் வசூலிப்பதில் பெரும் மோசடி!

## சி.ஏ.ஜி. அறிக்கையில் அம்பலம்!

செங்கல்பட்டு, ஆக. 31 –

ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஏழரை லட்சம் கோடிக்கான ஏழு ஊழல்களை அம்பலப்படுத்தி, பெரும் பூகம்பத்தை உருவாக்கியுள்ளது சி.ஏ.ஜி.. அதில் ஒன்று சுங்கச்சாவடி ஊழல். சுங்கச்சாவடிகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று பொதுப் பணத்தில் அமைக்கப்பட்ட சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகள். இரண்டாவது, தனியார் பணத்தில் அமைக்கப்பட்ட சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகள்.

செங்கல்பட்டு பரனூர் சுங்கச்சாவடி, பொதுப் பணத்தில் அமைக்கப்பட்ட சுங்கச்சாவடியாகும். அதன் வழியாக 2019 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2020 ஜூன் மாதம் வரையிலான காலத்தில் 1 கோடியே 17 லட்சத்து 8 ஆயிரத்து 438 வாகனங்கள் கடந்து சென்றுள்ளன. ஒரு கோடிக்கும் அதிகமான வாகனங்கள் பயணித்துள்ளன. இவற்றில் 62 லட்சத்து 37 ஆயிரத்து 152 வாகனங்கள் சுங்கக்கட்டணம் செலுத்தாமல் சென்ற முக்கிய பிரமுகர்களின் வாகனங்களாகும். பரனூர் சுங்கச்சாவடி மட்டுமல்ல. பொதுப் பணத்தில் அமைக்கப்பட்ட ஆத்தூர் சுங்கச்சாவடியில் 36 சதவீதம். 2020 ஜனவரி மாதம் முதல் 2020 செப்டம்பர் வரையிலான காலக்கட்டத்தில் கப்பலூர் சுங்கச்சாவடியில் 25 சதவீதம், லம்பாலகுடி சுங்கச்சாவடியில் 18 சதவீதம் என முக்கிய பிரமுகர்களின் வாகனங்கள் கட்டணம் செலுத்தாமல் பயணித்துள்ளன.

ஆனால் தனியார் சுங்கச்சாவடியில் இந்த கணக்கு தலைகீழாக உள்ளது. செங்குறிச்சி சுங்கச்சாவடியில் 2020 ஜனவரி முதல் 2020 செப்டம்பர் வரை கடந்து சென்ற வாகனங்கள் 49 லட்சத்து 77 ஆயிரத்து 901. அவற்றில் கட்டணம் கட்டாத முக்கிய பிரமுகர்களின் வாகனங்கள் 12.60 சதவீதம். கணியூர் சுங்கச்சாவடியில் 11 புள்ளி 12 சதவீதம். வேலன் செட்டியூர் சுங்கச்சாவடியில் 7 புள்ளி 13 சதவீதம். பாளையம் சுங்கச்சாவடி யில் 6 புள்ளி 93 சதவீதம். வைகுண்டம் சுங்கச்சாவடியில் 6 புள்ளி 76 சதவீதம். கொடைரோடு சுங்கச்சாவடியில் 6 புள்ளி 6 சதவீதமாகும்.

பொதுப்பணத்தில் அமைக்கப்பட்ட சாலையான பரனூர் சுங்கச்சாவடியில் 53 சதவிகிதம் முக்கிய பிரமுகர்கள் பயணம் செய்கிறார்கள். அதுவே தனியார் பணத்தில் அமைக்கப்பட்ட கொடைரோடு சுங்கச்சாவடியில் 6 சதவிகிதம் தான் என்றால் எவ்வளவு பெரிய முறைகேடு அரங்கேறி இருக்கிறது. ஆனால் முக்கிய பிரமுகர்கள் சென்றார்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் சேகரிக்கப்படவில்லை. பதிவுகள் கூட செய்யப்படவில்லை என சி.ஏ.ஜி அறிக்கை சொல்கிறது.

பொதுப் பணம் மற்றும் தனியார் சுங்கச்சாவடிகள் இரண்டிற்கும் விதிகள் ஒன்றுதான். விதிகளை நிறைவேற்றுகிறார்களா என்பதை பார்க்க வேண்டிய பொறுப்பு நெடுஞ்சாலை அமைச்சகத்திற்கு இல்லையா? அரசுக்கு இழப்பு இல்லை என்பது உண்மையா? வாங்கி விட்டு மறைத்தார்களா? வருவாய் வாய்ப்புகளை வைத்துதானே தனியார்களுக்கு வசூல் பொறுப்பு ஒப்படைக்கப்படும்! அப்படி என்றால் எத்தனை மடங்கு தொகையை இவர்கள் வாரிசுருட்டி உள்ளனர் என விமர்சனங்கள் முன் வைக்கப்படுகிறது. 11.09.1956க்கு பின்னால் கட்டப்பட்ட பாலங்களில் செல்வதற்குத் தான் சுங்கக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

ஆனால் பரனூர் சுங்கச்சாவடி பாலம் ஒன்றின் வழி பயணத்திற்கு 2018 முதல் 2021 வரை 22 கோடியே 10 லட்ச ரூபாய் வசூலிக்கப்பட்டிருப்பதையும் அம்பலப்படுத்தியுள்ளது சி.ஏ.ஜி. அறிக்கை. பரனூர் சுங்கச்சாவடி, சி.ஏ.ஜி. அறிக்கையால் பலவகையிலும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சுங்கச்சாவடியாக மாறியுள்ளதாக சாடியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், உலகத்திலேயே 50 சதவிகித முக்கிய பிரமுகர்கள் பயணம் செய்யும் பெருமை கொண்ட பரனூர் டோல்கேட்டை, நவீன ஊழலின் அடையாளமாக “பா.ஜ.க. மாடல் டோல்கேட்” என்றே அழைக்கலாம் என விமர்சித்துள்ளார்.

## குழந்தைகள் கல்வி முன்பணத் தொகை

# அரசு ஊழியர்களுக்கு 20 மடங்காக உயர்வு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு! அரசு ஊழியர்கள் மகிழ்ச்சி!

*சென்னை, ஆக. 31 -*

*தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு கல்விக்கான முன்பணம் ரூ.50,000 முன்பணம் என நிர்ணயித்து 20 மடங்காக உயர்த்தி மெகா அறிவிப்பு ஒன்றை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. இச்செய்தி அறிந்ததும் அரசு ஊழியர்கள் மகிழ்ச்சி தெரிவித்து இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர்.*

*அரசு ஊழியர்களின் குழந்தைகள் கல்வி கற்பதற்கான கல்வி முன்பணம் தொகை குறித்து தமிழக அரசு முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. மூன்று விதமான கல்லூரிகளுக்கு எவ்வளவு தொகை உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது என விரிவாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பால் தமிழக அரசு ஊழியர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.*

*தமிழக அரசு ஊழியர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் வகையில் ஓர் அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதாவது, அரசு ஊழியர்களின் குழந்தைகள் கல்வி கற்பதற்கான கல்வி முன்பணம் உயர்த்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது.*

**உயர்கல்விக்கு முன்பணம்!**

*முன்னதாக 13.06.1979ல் பிறப்பிக்கப்பட்ட அரசாணையின் படி கல்விக்கான முன்பணம் 1,000 ரூபாய் எனவும், பல்தொழில்நுட்ப கல்வி பயில்வதற்கு 500 ரூபாய் எனவும் முன்பணம் வழங்கப்பட்டு வந்தது. அதன்பிறகு 1,000 ரூபாயில் இருந்து 1,500 ரூபாயாகவும், 500 ரூபாயில் இருந்து 750 ரூபாயாகவும் 01.12.1988ல் அரசாணை வெளியிடப்பட்டது.*

*இந்த அரசாணை வெளியிடப்பட்டு 30 ஆண்டுகள் கடந்து விட்டன. எனவே அரசு ஊழியர்களின் நலனை கருத்தில் கொண்டு, அவர்களது குழந்தைகள் கல்வி கற்க வழங்கப்பட்டு வந்த இந்த குறைந்த கல்வி முன்பணம் தமிழக அரசால் தற்போது உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. உயர்த்தப்பட்ட கல்வி முன்பணத் தொகை ஆனது நடப்பு 2023 - 2024ஆம் கல்வி யாண்டில் இருந்து வழங்கப்படும். அதேசமயம் சில நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளன.*

**இரண்டு நிபந்தனைகள்**

- *தொகுதி ‘சி’ மற்றும் ‘டி’ ஊழியர்களுக்கு ஒரு மாத அடிப்படை சம்பளத்திற்கு சமமான தொகை அல்லது அதற்கு கீழே பரிந்துரைக்கப்பட்ட வரம்புகளில் எது அதிகமோ அந்த தொகை அனுமதிக்கப்படும்.*
- *தொகுதி ‘ஏ’ மற்றும் ‘பி’ அலுவலர்களுக்கு ஒரு மாத அடிப்படை சம்பளத்தில் 50 சதவீதம் அல்லது அதற்கு கீழே பரிந்துரைக்கப்பட்ட வரம்புகளில் எது அதிகமோ அந்த தொகை அனுமதிக்கப்படும்.*

*இதன்படி தொழில் முறை கல்விக்கு முன்பு ரூ.2500 வழங்கிய நிலையில் தற்போது ரூபாய் 50 ஆயிரம் வரையிலும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு முன்பு ரூ.2000 வழங்கிய நிலையில் தற்போது ரூ.25,000 வரையிலும் பல் தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பு 1000 ரூபாய் வழங்கிய நிலையில் தற்போது 25,000 வரையிலும் வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.*

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 31-08-2023

# ஏன் பதறுகிறார் பழனிசாமி?

**‘கொடநாடு’ என்று சொன்னாலே ‘கொல நடுக்கம்’ ஏற்படுகிறது பழனிசாமிக்கு. அதிகமாகப் பதறுகிறார் பழனிசாமி. எதற்காக அவர் பதற வேண்டும்?**

**‘எனக்குத் தெரிந்த உண்மைகளைச் சொல்லத் தயார்’ என்று என்றாவது சி.பி.சி.ஐ.டி. வாசலுக்கு அவர் வந்திருந்தால் அவரை நம்பலாம். ஆனால், அவரது பதற்றமே அவர் மீதான சந்தேகத்தை அதிகப்படுத்துகிறது.**

ஜெயலலிதாவின் கார் ஓட்டுநரான கனகராஜின் அண்ணன் தனபால் ஊடகங்களுக்கு பேட்டி அளித்துள்ளார். அந்தப் பேட்டியைப் பார்த்ததும் பழனிசாமியின் பிபி எகிறுகிறது.

**“கொடநாடு கொலை, கொள்ளை, மர்ம மரணங்கள் தொடர்பாக எடப்பாடி பழனிசாமியிடம் விசாரணை நடத்த வேண்டும். கொடநாட்டில் இருந்து 5 பைகள் நிறைய ஆவணங்களை எனது தம்பி கனகராஜ் கொண்டு வந்தார். பெருந்துறையில் வைத்து அதனை என்னிடம் காண்பித்தார். அதில், 3 பை சங்ககிரிக்கும், 2 பை சேலத்திற்கும் எனது தம்பி எடுத்துச் சென்று கொடுத்தார். அப்போது சயானும் உடனிருந்தார். எடப்பாடி பழனிசாமி சொல்லித்தான் இதனை எனது தம்பி செய்தார். ஆனால் எனது தம்பியை பலிகடாவாக்கி விட்டனர். தற்போது எனது உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவே போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும்”** என்று கேட்கிறார் கனகராஜின் அண்ணன் தனபால். இவர் சொல்வது உண்மையோ பொய்யோ நமக்குத் தெரியாது. பழனிசாமிக்குத்தான் தெரியும். அவர்தான் முழு உண்மையைச் சொல்ல வேண்டும்.

ஆனால் பழனிசாமி அந்த உண்மையைச் சொல்லவில்லை. ‘கனகராஜுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. கொடநாடு வீட்டுக்குள் அவரை நான் அனுப்பவில்லை. கனகராஜ் எந்தப் பையையும் கொண்டு வந்து என்னிடம் தரவில்லை. இதை எந்த இடத்திலும் சொல்ல நான் தயாராக இருக்கிறேன்’ என்றல்லவா பழனிசாமி சொல்லி இருக்க வேண்டும். அதைச் சொல்லவில்லை பழனிசாமி. ‘கனகராஜ், ஜெயலலிதாவின் கார் டிரைவர் அல்ல, சசிகலாவின் டிரைவர்தான்’ என்று விளக்கம் அளித்துள்ளார். கனகராஜ், யார் காரை ஓட்டினார் என்பதல்ல பிரச்சினை.

**“கனகராஜை, ஜெயலலிதாவின் கார் டிரைவர் என இனி யாரும் சொல்லக் கூடாது. அவர் சசிகலாவுக்கு கார் டிரைவராக இருந்தவர். கனகராஜை, ஜெயலலிதாவின் கார் டிரைவர் என்று இனி யாராவது சொன்னால் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வோம். கொடநாடு பற்றி யாரும் பேசக் கூடாது. அந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது”** இதுதான் கடந்த 25 ஆம் தேதி சேலத்தில் வைத்து பழனிசாமி கொடுத்த பேட்டி ஆகும். கனகராஜ், யாருக்கு கார் டிரைவராக இருந்தார் என்பதல்ல பிரச்சினை. கனகராஜை ஏவியது யார் என்பதுதான் கேள்வி.

* கொடநாடு பங்களாவில் கொலை, கொள்ளை நடந்தது 2017 ஏப்ரல் 23 ஆம் தேதி. அப்போது முதலமைச்சராக இருந்தவர் பழனிசாமி. அன்றைய தினமே ஓம்பகதூர் என்ற காவலாளி கொலை செய்யப்பட்டார்.

* அடுத்த ஐந்தாவது நாள் அதாவது ஏப்ரல் 28 ஆம் தேதி ஆத்தூர் அருகே உள்ள முல்லைவாடி சந்தனகிரி புறவழிச்சாலை தென்னங்குடி பாளையம் என்ற இடத்தில் மர்மமான முறையில் கனகராஜ் இறந்து கிடந்தார். இருசக்கர வாகனத்தில் சென்ற கனகராஜ் மீது கார் மோதியதாக அ.தி.மு.க. ஆட்சியில் வழக்கு பதியப்பட்டது. ‘இது விபத்து அல்ல, என் சகோதரர் மரணத்தில் மர்மம் உள்ளது’ என்று கனகராஜின் சகோதரர் தனபால் அன்று முதல் சொல்லி வருகிறார்.

* கனகராஜ் சொல்லி இந்தச் சம்பவத்தைச் செய்த சயான் மீது இதே போல் மர்மமான கார் மோதுகிறது. அதில் சம்பவ இடத்திலேயே சயானின் மனைவியும், மகளும் மரணம் அடைகிறார்கள்.

* கொடநாடு எஸ்டேட்டின் சி.சி.டி.வியை கையாளும் தினேஷ்குமார் என்பவர் மர்மமான முறையில் தற்கொலை செய்து கொள்கிறார்.

- இந்த வகையில் ஒரு கொள்ளை - ஒரு கொலை - மூன்று மர்ம மரணங்கள் - ஒரு தற்கொலை ஆகியவை நடந்த மர்மமான வழக்கு இது. பழனிசாமி ஆட்சி செய்தபோது தான் இது நடந்தது. அ.தி.மு.க. ஆட்சியில் சிலரை கைது செய்து கணக்குக் காட்டி முடிக்கப் பார்த்தார்கள். தி.மு.க. ஆட்சி மாறியதும், வழக்கின் விசாரணை உண்மையாக நடக்கத் தொடங்கியது.

**குற்றம் சாட்டப்பட்டு கைதானவர்களே, ‘நாங்கள் இன்னும் சில உண்மைகளைச் சொல்ல வேண்டும்’ என்று முன் வந்ததால் அந்த வழக்கு மீண்டும் நீதிமன்ற அனுமதியுடன் விசாரிக்கப்பட்டது. இந்த விசாரணையைத் தொடங்கியதும், பதற்றம் ஆனார் பழனிசாமி. 2021 ஆகஸ்ட் 18 ஆம் நாள் சட்டமன்றத்தில் கொந்தளித்தார். வெளிநடப்பு செய்தார். உடனடியாக ஆளுநரிடம் போய் மனு கொடுத்தார். ‘என்னைக் கைது செய்ய சதி’ என்று அலறினார். “கொடநாடு வழக்கை மீண்டும் விசாரிக்கக் கூடாது. சயன் வழக்கு முடியும் தருவாயில் உள்ளது. இதை மீண்டும் விசாரித்து வருகிறார்கள். இவர்கள் கேரளாவைச் சேர்ந்தவர்கள். சயன் வாக்குமூலத்தில் என்னையும் இணைத்துள்ளார்கள். மீண்டும் வழக்கை விசாரிக்கிறார்கள். பழிவாங்க இதை ஜோடிக்கிறார்கள்” என்று ஏதேதோ சொன்னார் பழனிசாமி.**

ஒரு வழக்கை மீண்டும் விசாரிக்கக் கூடாது என்று சொல்ல இவர் யார்?

எந்த வழக்கையும் மேற்கொண்டு புலன் விசாரணையை காவல் துறை நடத்தலாம். மேல் புலன் விசாரணை (Further Investigation) என்பது குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டத்தின் 173(8) பிரிவின் படி நடத்தப்படுவது. அதன்படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த பின்னர் கூடுதல் தகவல் கிடைத்தால் அதை முறைப்படி விசாரணை செய்ய காவல் துறைக்கு உரிமையும் கடமையும் உண்டு. அதன்படி தான் கொடநாடு வழக்கிலும் மேற்கொண்டு புலன் விசாரணை நடத்தப்படுகிறது.

**சட்டப்படி தான் நடக்கிறது விசாரணை. அனைத்தும் சட்டப்படி விரைவில் நடக்கும்.**

“விஸ்வகர்மா யோஜனா” என்ற பெயரில் ஒன்றிய அரசு கொண்டு வரும்

# குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து செப்டம்பர் 6ஆம் தேதி சென்னையில் மாபெரும் மக்கள் திரள் கண்டன ஆர்ப்பாட்டம்!

## திராவிடர் கழகம் நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஆக. 31-

“விஸ்வகர்மா யோஜனா” என்ற பெயரில் பரம்பரைப் பரம்பரையாக செய்து வந்த ஜாதித் தொழிலை ஊக்குவிக்கும் வர்ணாசிரம குலக்கல்வி திட்டத்தை ஒன்றிய பி.ஜே.பி அரசு கொண்டு வந்துள்ளது. 18 வயது நிரம்பியவர்கள் விண்ணப்பிக்கலாம் என்பது அப்பன் தொழிலை மகன் செய்வதற்கான சூழ்ச்சியாகும் மேற்படிப்பைத் தடுப்பதும் ஆகும்.

இதனைக் கண்டிக்கும் வகையிலும், எதிர்க்கும் வகையிலும் வரும் செப்டம்பர் 6ஆம் தேதி சென்னையில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் பங்கேற்கும் மாபெரும் மக்கள் திரள் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்துவது என்று திராவிடர் கழகம் சென்னை பெரியார் திடலில் நேற்று முன்தினம் (29.8.2023) கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

தீர்மானம் வருமாறு :-

குலக்கல்வித் திட்டத்தின் மறுவடிவமான ‘விஸ்வகர்மா யோஜனா’ என்ற ஒன்றிய அரசின் சதித் திட்டத்தைக் கண்டித்து நேற்று முன்தினம் (29.08.2023) சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

‘விஸ்வகர்மா யோஜனா’ என்ற ஒன்றிய அரசின் திட்டமும். அதில் அடங்கியுள்ள குலத் தொழில் பக்கம் இளைஞர்களை ஈர்க் கும் சூழ்ச்சியும் பி.ஜே.பி. தலைமையிலான ஒன்றிய தேசிய ஜன நாயகக் கூட்டணி அரசு, அண்மையில் ‘விஸ்வகர்மா யோஜனா’ என்ற ஒரு திட்டத்தை அறிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களும் சுதந்திர தினக் கொடியேற்று நிகழ்ச்சியிலும் 15.08.2023 இத்திட்டத்தை அறிவித்துள்ளார்.




சென்னை பெரியார் திடலில் நேற்று முன்தினம் (29.08.2023) திராவிடர் கழகம் சார்பில் நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்ற தலைவர்கள்.

செருப்பு தைப்பவர் உள்பட பரம்பரை பரம்பரையாக 18 வகையான ஜாதித் தொழில்களைச் செய்பவர்களுக்கு ஊக்கம் அளிப்பதாகக் கூறி ரூபாய் 13 ஆயிரம் கோடியை ஒன்றிய அரசு ஒதுக்கியுள்ளது. (ஜாதிப் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

‘குரு சிஷ்யப் பரம்பரை’ என்றும் வெளிப்படையாகவே கூறப்பட்டுள்ளது. இந்த நிதியைப் பெறுவதற்கு குறைந்த பட்ச வயது 18 என்றும் ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இதன் பின்னணியில் இருப்பது 18 வயது அடைந்த பிள்ளைகளை மேற்கொண்டு கல்லூரியில் படிக்கவிடாமல் பரம்பரை ஜாதித் தொழிலையே செய்யத்தூண்டும், குலத் தொழிலை மேலோங்கச் செய்யும் திட்டமிட்ட சூழ்ச்சியாகும்.

இது 1952-1954இல் சென்னை மாநில முதலமைச்சராக இருந்த ராஜகோபாலாச்சாரியார் கொண்டு வந்த குலக் கல்வித் திட்டத்தின் மறுபதிப்பாகும்.

ஆண்டாண்டு காலமாகக் கல்வி உரிமை மறுக்கப்பட்ட பிள்ளைகள் கல்வியில் உயர்நிலையை எட்டுவதைத் தடுத்து நிறுத்தி, 18 வயது அடைந்தவுடன் அவர்களைப் பரம்பரை ஜாதித் தொழிலை நோக்கியே நகர்த்திடத் திட்டமிட்டுள்ள ஒன்றிய அரசின் இந்த வருணாசிரம சதித் திட்டத்தை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

நாக்கில் தேன் தடவுவது போல, நிதியை ஒதுக்கி, காலம் காலமாகக் கல்வி உரிமை மறுக்கப்பட்ட மக்கள், தப்பித் தவறிக் கல்லூரியில் அடியெடுத்து மேற்படிப்பு படிக்க முன் வந்திருக்கும் இந்தக் காலகட்டத்தில் அதனை முறியடிக்கும் சூழ்ச்சிப் பொறிதான் ஒன்றிய பா.ஜ.க. அரசின் ‘விஸ்வகர்மா யோஜனா’ என்பதை எடுத்துக்காட்டி இக்கூட்டம் இந்தக் குலக்கல்வித் திட்டத்தை எதிர்க்கிறது.

பரம்பரை பரம்பரையாக ஜாதி தொழிலையே செய்ய வேண்டும் என்று பிள்ளைகளின் கல்விக் கண்ணைக் குத்தும் இந்தத் திட்டத்திற்குத் தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களும் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்றும், எதிர்க்க முன்வர வேண்டும் என்றும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

முதற்கட்டமாக இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் குலக்கல்வித் திட்டத்தின் மறுவடிவமான விஸ்வகர்மா யோஜனா திட்டத்தை எதிர்த்து அனைத்து சமூக நீதிக் கொள்கை சார்ந்த கட்சிகளும் ஒருங்கிணைந்து மாபெரும் மக்கள் திரள் கண்டன ஆர்ப்பாட்டத்தை வரும் செப்டம்பர் 6ஆம் தேதியன்று சென்னையில் நடத்துவது என்று தீர்மானிக்கப்படுகிறது.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைப்புகளின் பிரதிநிதிகள்:

ஆசிரியர் கி. வீரமணி, தலைவர், திராவிடர் கழகம்

ஆ.ராசா எம்.பி, துணைப் பொதுச்செயலாளர், தி.மு.க.

கே.எஸ்.அழகிரி, தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

தொல்.திருமாவளவன் எம்.பி., தலைவர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

கே.எம்.காதர் மொகிதீன், தேசியத் தலைவர், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்.

மு.வீரபாண்டியன், மாநிலத் துணைச்செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

ஆ.வந்தியத்தேவன், அமைப்புச் செயலாளர், ம.தி.மு.க.

க.கனகராஜ், மாநில செயற்குழு உறுப்பினர் சி.பி.அய்.எம்.

ப.அப்துல் சமது எம்.எல்.ஏ., பொதுச் செயலாளர், மனித நேய மக்கள் கட்சி

பேராசிரியர் சுப.வீரபாண்டியன், பொதுச்செயலாளர் திராவிட இயக்கத் தமிழர் பேரவை

பொன்.குமார், தலைவர், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி

கோ.கருணாநிதி, அகில இந்திய பிற்படுத்தப்பட்ட ஊழியர் நலச்சங்கங்களின் கூட்டமைப்பு

பு.பா.பிரின்ஸ் கஜேந்திரபாபு, பொதுச்செயலாளர், பொதுப்பள்ளிக்கான மாநில மேடை

துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ், பொருளாளர் வீ.குமரேசன், பிரச்சாரச் செயலாளர் வழக்குரைஞர் அ.அருள்மொழி, துணைப் பொதுச் செயலாளர் பொறியாளர் ச.இன்பக்கனி மற்றும் அனைத்துக் கட்சிகளின் பொறுப்பாளர்கள் பலரும் பங்கேற்றனர்.

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

## தமிழ்நாடு அரசுக்கு திருவாரூர் மாவட்ட கூட்டத்தில் பாராட்டு தீர்மானம்!

திருவாரூர், ஆக 31-

தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரசு தொடக்கப்பள்ளிகளிலும் காலை உணவுத்திட்டத்தை, திருக்குவளையில் தொடங்கி வைத்து, இந்திய வரலாற்றில் நீங்காத இடத்தை பெற்றிருக்கும் தமிழ்நாடு முதல்வருக்கு பாராட்டும் நன்றியும் தெரிவித்து தலையாமங்கலம் ஜி.பாலு தலைமையில் நடைபெற்ற திருவாரூர் மாவட்ட ஊராட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருவாரூர் மாவட்ட ஊராட்சிக்கூட்டம் மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு தலைமையில் நடைபெற்றது. துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், செயலாளர் சந்தானம் ஆகியோர் முன்னிலை ஏற்றனர், கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் முதல்வரின் வழிகாட்டுதல்களின்படி மாவட்டம் முழுவதும் நடைபெற்ற மாவட்ட ஊராட்சி பணிகளும், நடைபெற இருக்கிற பணிகளும் குறித்து விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் திராவிட நாயகர் முதல்வர் அவர்களின் சீரிய திட்டங்களால் இந்திய அளவில் முன்னிலை அடைந்திருக்கும் நமது தமிழ்நாடு, பள்ளிக்குழந்தைகளின் கல்வியை மேம்படுத்தும் வகையில் தொலைநோக்குப்பார்வையுடன் கொண்டுவந்திருக்கும் காலை உணவுத்திட்டத்தை, மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த ஊரான திருக்குவளையில், அவர் படித்த பள்ளியில் தொடங்கிவைத்திருக்கும் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களுக்கு திருவாரூர் மாவட்ட ஊராட்சியின் சார்பில் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்வது, முதல்வரின் திட்டங்களின் பலன்களை காலம் தாழ்த்தாமல் மக்களுக்கு கொண்டு சேர்க்க அயராது பாடுபடுவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# காவிரியில் 6,398 கன அடி நீர் திறப்பு!

பெங்களுரு, ஆக.31-

கர்நாடக அணைகளில் இருந்து காவிரியில் திறக்கப்படும் தண்ணீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. இரு அணைகளில் இருந்து 4,293 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வந்த நிலையில் நேற்று தண்ணீர் திறப்பு 6,398 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கே.ஆர்.எஸ் அணையில் இருந்து 4,398 கனஅடியும் கபினி அணையிலிருந்து 2,000 கன அடி நீரும் காவிரியில் திறந்து விடப்பட்டு வருகிறது. நிலவரப்படி வெளியேற்றப்படும் நீரின் அளவு 6,398 கன அடியாக உயர்ந்துள்ளது.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, காணை ஊராட்சி ஒன்றியம், காங்கியனூர் ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் ரூ.12.61 கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி மையத்தை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி திறந்து வைத்து குழந்தைகளுடன் அன்பை பரிமாறிக் கொண்டார். மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாநில விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா, ஒன்றிய குழுத் தலைவர் கலைச்செல்வி, ஒன்றியச் செயலாளர்கள் கல்பட்டு வி.இராஜா, மாவட்ட கவுன்சிலர் ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், மாவட்ட கவுன்சிலர் சிவக்குமார், ஒன்றிய குழு துணை தலைவர் வீரராகவன், ஒன்றிய கவுன்சிலர் சேட்டு, ஊராட்சி மன்ற தலைவர் இளஞ்செழியன் மற்றும் ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## நாடாளுமன்றத் தேர்தலுக்காக சிலிண்டர் விலை குறைப்பு நாடகம்!

# மக்களின் கோபத்தை 200 ரூபாய் குறைத்துவிடாது!


### மோடி அரசை கடுமையாகத் தாக்கிய மல்லிகார்ஜூன கார்கே!

புதுடெல்லி, ஆக. 31 - நாட்டு மக்களின் கோபத்தை ரூ.200 மானியத்தால் குறைக்க முடியாது என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்துள்ளார்.

இந்தியாவில் 2014ம் ஆண்டு மோடி அரசு ஆட்சிக்கு வந்தபோது வீட்டு உபயோக சிலிண்டர் விலை ரூ.417 ஆக இருந்தது. ஆனால் படிப்படியாக ரூ.1118 ஆக உயர்ந்துள்ளது. இந்த விண்ணை முட்டும் விலை உயர்வால் குடும்பத் தலைவிகள் கடும் அவஸ்தைகளை சந்தித்து வருகின்றனர்.

இந்த கடும் விலை உயர்வைக் குறைக்க வேண்டும் என காங்கிரஸ், தி.மு.க, சி.பி.எம் உள்ளிட்ட கட்சிகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தன. அப்போது எல்லாம் சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்ததே விலை உயர்வுக்கு காரணம் என மோடி அரசு கூறியது. பின்னர் கச்சா எண்ணெய் விலை குறைந்த பிறகும் கூட சிலிண்டர் விலையை மோடி அரசு குறைக்கவில்லை.

இந்நிலையில் 5 மாநிலங்களில் தேர்தல் நெருங்கும் நிலையில், வீட்டு உபயோ சமையல் சிலிண்டர் விலையை ரூ.200 குறைத்துள்ளது. மேலும் உஜ்வாலா திட்டத்தின் கீழ் பயன்பெறுபவர்களுக்கு ரூ.200 மானியம் வழங்கப்படும் எனவும் ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. ஒன்றிய அரசின் இந்த அறிவிப்பு தேர்தல் நாடகம் என எதிர்க்கட்சி தலைவர்கள் விமர்சித்து ள்ளனர்.



இந்நிலையில், கஷ்டத்தில் இருக்கும் நாட்டு மக்களின் கோபத்தை ரூ.200 மானியத்தால் குறைக்க முடியாது என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், “எப்போது வாக்குகள் குறைய ஆரம்பிக்கிறதோ, அப்போதே தேர்தல் பரிசுகள் விநியோகிக்க ஆரம்பம் ஆகும்!

மக்கள் உழைத்து சம்பாதித்த பணத்தை கொள்ளையடித்த இரக்கமற்ற மோடி அரசு, தற்போது தாய் மற்றும் சகோதரிகள் மீது போலியான நல்லெண்ணத்தை காட்ட வருகிறது. ஒன்பதரை வருடங்களாக சாமானியனின் வாழ்க்கையை சீரழித்துக்கொண்டே இருந்தார்கள், அப்போது ஏன் எந்த ஒரு “பாசப் பரிசு”ம் நினைவுக்கு வரவில்லை?

140 கோடி இந்தியர்களை ஒன்பதரை வருடங்களாக சித்திரவதை செய்துவிட்டு, “தேர்தல் லாலிபாப்களை” கைமாறுவது பலிக்காது என்பதை பாஜக அரசு தெரிந்து கொள்ள வேண்டும். உங்கள் பத்தாண்டு கால பாவங்கள் கழுவப்பட முடியாதது.

பா.ஜ.கவால் அமல்படுத்தப்பட்ட பணவீக்கத்தை எதிர்கொள்ள, பல மாநிலங்களில் முதன்முறையாக காங்கிரஸ் கட்சி ஏழைகளுக்கு ரூ.500 சிலிண்டர்களை வழங்கப் போகிறது. ராஜஸ்தான் போன்ற பல மாநிலங்கள் ஏற்கனவே இதை அமல்படுத்தியுள்ளன.

2024ல் கஷ்டத்தில் இருக்கும் நாட்டு மக்களின் கோபத்தை ரூ.200 மானியத்தால் குறைக்க முடியாது என்பதை மோடி அரசு அறிந்து கொள்ள வேண்டும். இந்தியாவைப் பற்றிய பயம் நல்லது, மோடி அவர்களே! பொதுமக்கள் முடிவு செய்து விட்டனர். பணவீக்கத்தை முறியடிக்க, பா.ஜ.க.வுக்கு வெளியேறும் கதவை காட்டுவதுதான் ஒரே வழி” என்று தெரிவித்துள்ளார்.

### புதுடெல்லியில் - ஒன்றிய அமைச்சரிடம்

# தென்னை நார் தொழில்களை மறுவகைப்படுத்திட கோரிக்கை!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் தெரிவித்தார்!

புதுடெல்லி, ஆக.31- புதுடெல்லியில் நேற்று முன்தினம் (29.08.2023) ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் அவர்களை தமிழ்நாடு அரசின் சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சந்தித்து தென்னை நார் தொழில்களை மறு வகைப்படுத்துவது தொடர்பான கோரிக்கை வழங்கினார்.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள் பல்வேறு தென்னை நார் தொழில் உற்பத்தி சங்கங்கள், கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, வாரியத் தலைவர் மற்றும் உறுப்பினர் செயலர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூத்த அதிகாரிகளுடன் 8.8.2023 அன்று, சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் கூட்ட அரங்கில் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் தென்னை நார் தொழிற்சாலைகளின் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டு அவற்றிற்கு தீர்வுக்கான அறிவுரைகள் வழங்கப்பட்டது. மேலும் தற்போதைய நிலையில் இத்தொழிற்சாலைகள் வெள்ளை வகைப்பாட்டில் தான் தொடர்கிறது என தெளிவுபடுத்தப்பட்டது.

மேலும் ஜூலை 2023-இல் வெளியிடப்பட்ட மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தொழிற்சாலைகளுக்கான வரைவு வகைப்பாடு அறிவிக்கையின் மீது தென்னை நார் சங்கங்களும் முறையீடு செய்யலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

தமிழ்நாடு மாநில தென்னை நார் தொழிற்சாலைகளின் கூட்டமைப்பு தனது மனுவில், தென்னை நார் தொழில்களை ஆரஞ்சு என வகைப்படுத்துவதால் தென்னை நார் தொழில்களின் தற்போதைய சிரமங்கள் மற்றும் வீழ்ச்சி குறித்து கீழ்வருமாறு எடுத்துரைத்துள்ளது.

தமிழகத்தில் சுமார் 4.44 லட்சம் ஹெக்டேர் தென்னை சாகுபடி நடைபெற்று வருவதாகவும், ஒரு ஹெக்டேருக்கு 11,526 காய்கள் உற்பத்தித்திறன் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. தென்னை நார் தொழில் பல்வேறு பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது.

1. தென்னை நார்

2. தென்னை நார் பித் பல்வேறு வடிவங்களில்

3. தென்னை நார் நூல்

4. சுருண்ட தென்னை நார்

5. தென்னை நார் ஜியோ டெக்ஸ்டைல்ஸ்

6. தென்னை நார் டஃப்ட் மேட்ஸ்

7. தென்னை நார் பானைகள், தென்னை நார் தொங்கும் கூடைகள் போன்ற தோட்டப் பொருட்கள்

தென்னை நார் தொழிலை மீண்டும் ஆரஞ்சு வகைக்கு மாற்றினால், மின் சுமை தேவைகள் மாற்றம், கான்கிரீட் தளம் அமைத்தல், விவசாயிகளின் வருவாய் வீழ்ச்சி போன்ற இடர்பாடுகளை சந்திக்க நேரிடும்.

தென்னை நார் தொழில் உற்பத்தி செயல்முறை பின்வருவனவற்றை உள்ளடக்கியது

1. உரித்தல் / சிதைத்தல் / அடித்தல் மூலம் தேங்காய் மட்டையிலிருந்து தென்னை நார் மற்றும் உமி பிரித்தெடுத்தல்

2. சலித்தல்

3. இயற்கை சூரிய ஒளியில் உலர்த்துதல்

4. கட்டுகளாக கட்டுதல்

மேலும், உற்பத்தி செயல்முறையில் பொதுவாக எந்த இரசாயனங்களும் பயன்படுத்தப்படுவதில்லை மற்றும் தென்னை நார் நனைக்கப் பயன்படுத்தப்படும், நீர் மீண்டும் மறுசுழற்சிக்கு உட்படுத்தப்படுகிறது; அதனால் தொழிற் கழிவுநீர் ஏதும் வெளியேற்றப்படுவதில்லை.

தென்னை நார் மற்றும் உமி ஆகியவை இயற்கையான சூரிய ஒளியின் உதவியுடன் முற்றத்தில் உலர்த்தப்படுகின்றன, மேலும் காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக உலர்த்தும் முற்றத்தின் எல்லையில் வலை தடுப்புடன் கூடிய சுற்றுச்சுவர் அமைக்கப்படுகிறது. எனவே, உற்பத்தி செயல்முறையின் அடிப்படையில் தென்னை நார் தொழில்களை மறு வகைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது

தமிழக அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர், தலைவர், தமிழ்நாடு மாநில தென்னை நார் சங்கங்களின் கூட்டமைப்பு இணைச் செயலாளர், தமிழ்நாடு மாநில தென்னை நார் சங்கங்களின் கூட்டமைப்பு, கோகோமன்ஸ் கோயம்புத்தூர் மாவட்ட தென்னை நார் உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் மற்றும் துணைத் தலைவர், பொருளாளர், ஈரோடு தென்னை நார் உற்பத்தியாளர் சங்க பொருளாளர், பழநி மாவட்ட தென்னை நார் உற்பத்தியாளர் சங்க தலைவர், ஈரோடு மாவட்ட தென்னை நார் உற்பத்தியாளர் சங்க தலைவர், டான் கோயர் இயக்குனர், உடுமலை சங்க பிரதிநிதி, மடத்துக்குளம் சங்க பிரதிநிதி ஆகியோருடன், நேற்று (29.08.2023) ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றுத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், அவர்களை சந்தித்து, தென்னை நார் தொழில் உற்பத்தி செயல்முறைகளின் அடிப்படையில் தென்னை நார் தொழிற்சாலைகள் பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும் என்ற தமிழ்நாடு மாநில தென்னை நார் சங்கங்களின் சம்மேளனத்தின் கோரிக்கை மனுவை அளித்தார்.

1. தென்னை நார் உற்பத்தி (உலர் செயல்முறை அல்லது ஈர செயல்முறை) மற்றும் அனைத்து தென்னை நார் பொருட்களின் உற்பத்தி வெள்ளை வகை

2. தென்னை நார் உற்பத்தி (இரசாயன செயல்முறை அல்லது சாயம் பூசும் செயல்முறை) ஆரஞ்சு வகை

இக்கூட்டத்தில், தென்னை நார் தொழில்களின் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சமர்ப்பித்துள்ள கோரிக்கையை பரிசீலிக்கவும், தென்னை நார் தொழில்களை மறு வகைப்படுத்துவது குறித்த அறிவிக்கையின் இறுதி வடிவம் வெளியிடும் போது, மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது.



புதுடெல்லியில் நேற்று முன்தினம் (29.08.2023) ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் அவர்களை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் சந்தித்து கோரிக்கை மனுவினை வழங்கினார்.

## கழகத் தீர்மானக் குழு!

# நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

### தீர்மானக் குழுச் செயலாளர்கள் அறிவிப்பு

தி.மு.க. தீர்மானக்குழு நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 7-9-2023 வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில், கழக தீர்மானக்குழுத் தலைவர் கவிஞர் தமிழ்தாசன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தீர்மானக்குழு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**பொருள்** : தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா,

டிசம்பர் 17 அன்று சேலத்தில் நடைபெற உள்ள “தி.மு.க. இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு", கழக ஆக்கப் பணிகள் குறித்து.

'அண்ணா அறிவாலயம்'
சென்னை - 18
நாள் : 29-8- 2023

**மீ.அ.வைத்தியலிங்கம்**
**கீரை எம்.எஸ். விஸ்வநாதன்**
**அக்ரி கே.பி.டி.கணேசன்**
செயலாளர்கள், தி.மு.க. தீர்மானக்குழு

## திருவள்ளூரில் கலைஞர் நூற்றாண்டு விழா!

திருவள்ளூர், ஆக. 31 - திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பட்டிமன்றம் திருவள்ளூரில் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் காலத்தை வென்ற கலைஞரைக் காலமெல்லாம் தமிழர்கள் நினைவு கூர்ந்திட பெரிதும் காரணம்.. அவர் சந்தித்த சோதனைகளா சாதித்த சாதனைகளா என தலைப்பில் பட்டிமன்ற நடுவர் நாஞ்சில் சம்பத், முனைவர் மானசீகன், கவிஞர் குமரிபிரபாகரன், பேராசிரியர் அன்பு, பேராசிரியை மலர்விழி ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினார்கள்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** அண்ணே! ‘சிவசக்தி முனையத்தை தலை நகரமாகக் கொண்டு, இந்து நாட்டை நிலவில் இந்தியா உருவாக்க வேண்டும்’ என்ற கோரிக்கை எழுந்திருக்கிறதே?

**பெரியதம்பி : ஆமாம்பா! அது மட்டுமா ? நிலவை ‘இந்து சனாதன நாடு’ என்று அறிவிக்க வேண்டும் என்ற இரண்டாவது கோரிக்கையும், பிரதமருக்கு வைக்கப்பட்டுள்ளது.**

**இந்த கோரிக்கைகளை முன்வைத்திருப்பவர் அகில இந்திய இந்து மகா சபையின் தேசியத் தலைவர் சுவாமி சக்ரபாணி மகராஜ் என்பவர் ஆகும்.**

**இனி இப்படி ஆர்.எஸ்.எஸ். மற்றும் மதவாத — மதவெறிப் பிரிவினை அமைப்புகள், நிலவு குறித்து, வரிசையாகக் கோரிக்கை வைக்க ஆரம்பித்து விடுவார்கள். ‘கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால், நிலவுக்கே சென்று போராட்டம் நடத்துவோம்’ என்று அச்சுறுத்த ஆரம்பித்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை !**

**வெளிநாட்டிலிருந்து, விளம்பர நோக்கத்துடன், சந்திரயான் வெற்றியைக் கொண்டாடுவதற்கு, அவசர அவசரமாக இந்தியா வந்த பிரதமர் மோடி அவர்கள் பெங்களூருவில் கொண்டாட்டத்தோடும், விஞ்ஞானிகளைப் பாராட்டியதோடும் முடித்துக் கொண்டு டில்லி திரும்பியிருந்தால், இந்த மாதிரி சர்ச்சைக்குரிய வேண்டுகோள்கள் எல்லாம் எழுந்திருக்காது.**

**ஆனால் நிலவு தொடர்பான தரவுகள் முழுமையாகச் சேகரிக்கப்பட்டு, அவற்றை வகைப் படுத்தி ஆய்வு செய்து, அதன் மூலம் மனித சமூகத்திற்கு எப்படிப்பட்ட நன்மைகளை வழங்கி மேம்பாடு காணலாம் என்பதை முடிவு செய்வதற்கு முன்பே, லேண்டர் விண்கலம் வெற்றிகரமாகத் தரை இறங்கிய இடத்துக்குப் பிரதமர் மோடி அவர்கள், ‘சிவசக்தி முனையம்’ என்று இந்துத்வா சார்ந்த பெயர் வைத்ததனால்தான், இந்தக் கோரிக்கைகள் !**

**குழந்தை பிறப்பதற்குமுன், அது ஆணா பெண்ணா என்று தெரியாமல் பெயர் சூட்டுவதைப் போன்றது இது !**




திருப்பூர் வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் தெற்கு மாநகர், வாலிபாளையம் பகுதி, 35 வது வட்டம், பெரியார் நகரில், மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., தலைமையில், மாநகர கழகச் செயலாளர்கள் டிகேடி. மு.நாகராசன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், தெற்கு மாநகர அமைப்பாளர் எம்.எஸ்.ஆர்.ராஜ், வடக்கு மாநகர அமைப்பாளர் எஸ்.முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையில் இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை, கழக அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் வகையில் திண்ணை பிரச்சாரத்தை கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், மேற்கு மண்டல பொறுப்பாளர் கே.இ.பிரகாஷ் துவக்கி வைத்தார். இதில் மாமன்ற உறுப்பினர்கள் முத்துகிருஷ்ணன், பி.ஆர்.செந்தில்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் த.சசிகுமார், ப.ரவிச்சந்திரன், செ.ராஜசேகர், மு.முகமது ஜினைத், சசிகுமார் (எ) த.ஞானசிகாமணி, ஈ.பாலசுப்பிரமணியம், உ.லிங்கேஸ்வரன், மாநகர துணை அமைப்பாளர்கள் தெற்கு ம.அசோக்குமார், கா.சையது அபுதாஹிர், மு.விக்னேஷ்குமார், க.திருநாவுக்கரசு, கு.அரவிந்த், ர.தமிழரசு, வடக்கு ஆ.வஞ்சிமுத்து, த.சந்திரசேகர், ச.பாண்டிதுரை, அ.பார்த்திபன், நா.தியாகு, பகுதி கழகச் செயலாளர்கள் மு.க.உசேன், கொ.ராமதாஸ், வட்ட கழகச் செயலாளர் ஆட்டோ ப.தங்கராஜ், செ.திலக்ராஜ் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக்கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கார்னேசன் திடலில் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் சார்பில் பெரியார் மையம் திறப்பு விழா, தந்தை பெரியார் சிலை திறப்பு விழா, அண்ணல் அம்பேத்கர் நூலகம் திறப்பு விழா ஆகிய முப்பெரும் விழா நடைபெற்றது. விழாவை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். திராவிட கழக தலைமைக் கழக அமைப்பாளர் ஊமை ஜெயராமன் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாவட்ட தலைவர் அறிவரசன் வரவேற்புரை ஆற்றினார். பெரியார் சிலையை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என். நேருவும், அம்பேத்கர் நூலகத்தை உணவு மற்றும் உணவுப் பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணியும் , கி வீரமணி படிப்பகத்தை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தியும் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினர்.



அரியலூர் மாவட்டம், திருமானூர் மேற்கு ஒன்றியம் - மேலப்பழுவூரைச் சேர்ந்த 9ஆம் வகுப்பு மாணவி தர்ஷினி இளம் பேச்சாளராக கழகத்தின் மேடைகள் தோறும் இயக்கக் கொள்கைகளையும் சாதனைகளையும் எடுத்துரைத்து வருகிறார். கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு சமீபத்தில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் "தமிழ்த் திரையுலகில் கலைஞரின் எழுதுகோல்" எனும் தலைப்பில் உரையாற்றி, இரண்டாம் பரிசாக வென்ற பரிசுத் தொகை ரூ.7 ஆயிரத்தை, சேலத்தில் நடைபெறவுள்ள இளைஞர் அணியின் 2ஆவது மாநாட்டுப் பணிகளுக்காக கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார். கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, எஸ்.எஸ்.சிவசங்கர் உள்ளிட்ட நிர்வாகிகள், 'இளம் வயதிலே கலைஞர் மீதும், கழகத்தின் மீதும் அவர் வைத்திருக்கும் அன்பை கண்டு வியந்தோம். தர்ஷினி மேன்மேலும் பல உயரங்களைத் தொட என் அன்பும் வாழ்த்துகளும்!" என்று வலைதள பதிவில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

'இண்டியா' அனைத்திந்திய எதிர்க்கட்சிகளின் கூட்டணிக் கூட்டத்தில் பங்கேற்க

# மும்பை வரும் கழகத் தலைவருக்கு உற்சாக வரவேற்பு!

## கழகத்தினருக்கு - மும்பை புறநகர் அலி சேக் மீரான் - மாநகரச் செயலாளர் கடவூர் பழனிச்சாமி வேண்டுகோள்!

மும்பை, ஆக. 31 - மும்பையில் நடைபெறும் 'இண்டியா' அனைத்து எதிர்க்கட்சிகளின் கூட்டணி கூட்டத்தில் கலந்து கொள்ள இன்று (ஆகஸ்ட் 31) மும்பைக்கு வருகை தரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அளிக்கப்படும் எழுச்சிமிகு வரவேற்பில் கழகத்தினரும் தமிழர்களும் பெருந்திரளாகப் பங்கேற்றுச் சிறப்பித்திடுமாறு மும்பை புறநகர் மாநிலச் செயலாளர் அலி சேக் மீரான், மும்பை மாநகரச் செயலாளர் கருவூர் பழனிச்சாமி ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவர்களது அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் தமிழ் நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மராத்திய மாநிலம் மும்பைக்கு இன்று (31 ஆம் தேதி வியாழக்கிழமை) வருகை தருகிறார். அன்று காலை 11 மணியளவில் மும்பை சர்வதேச விமான நிலையம் ( சஹார் முனையம் 2) வருகிறார் கழகத் தலைவர்.

இன்று (31.08.2023) மற்றும் நாளை (01.09.2023) ஆகிய இரண்டு நாட்கள் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தற்போதைய அரசின் சீர்கெட்ட ஆட்சிமுறையிலிருந்து நாட்டைக் காக்கவும்; இனம், மதம், மொழிப் பாகுபாடற்ற மனிதநேயம் நிறைந்த நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காகவும், ஒத்த கருத்துகளையுடைய இருபத்தியாறு (26) அரசியல் கட்சிகளை இணைத்து உருவான 'இண்டியா' (I.N.D.I.A.) அனைத்திந்திய எதிர்க்கட்சிகளின் கூட்டணிக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மும்பைக்கு வருகை புரிகிறார்.

அவ்வேளையில், நமது இயக்கத்தின் தலைவரை; 'திராவிட மாடல்' ஆட்சி நடத்தும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை; மும்பை விமான நிலையத்தில் நிர்வாகிகள், துணை மற்றும் கிளை அமைப்புகளின் நிர்வாகிகள், கழகத் தோழமைகள், மும்பைவாழ் தமிழ்மக்கள் புடைசூழ கலந்து கொண்டு வரவேற்று நமது மகிழ்வையும் பேராதரவையும் தெரிவிக்கும்படி மும்பை ,நகர புறநகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

உன்னதமான காலை உணவுத் திட்டத்தை கொண்டுவந்து

# பிள்ளைகள் கல்வி கற்க தாயாக மாறி ஊக்குவிக்கிறார் முதல்வர்!

## செஞ்சியில் அமைச்சர் மஸ்தான் பெருமிதம்!

செஞ்சி ஆக 31- ஒரு தாய்க்கு ஒரு தாயாக மாறிமுதலமைச்சரின்உன்னதமான காலை உணவு திட்டத்தினை கொண்டு வந்து பிள்ளைகள் கல்விகற்பதை முதலமைச்சர் ஊக்குவிப்பதாக செஞ்சி உருது பள்ளியில் காலை உணவு திட்டத்தை அமைச்சர் செஞ்சி மஸ்தான் துவக்கி வைத்து பெருமிதம் தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி,மீனம்பூர் பள்ளியம்பட்டு, உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அரசு உருது தொடக்கப் பள்ளிகள்,நடுநிலைப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் தொடக்க விழா நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்முன்னிலை வகித்தார்.

பள்ளி தலைமை ஆசிரியர்கள் பத்ருன்னிசா, நசிமுன்னிசா,ஆசீமாபாத் தூன் ஆகியோர் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும்வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான்கலந்து கொண்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும்விரிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில் இன்று அரசு உருது பள்ளிகளில் இத்திட்டத்தை அமைச்சர்செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடல் கடந்து வெளிநாடுகளுக்கு சென்று உயர்கல்விபடிக்கும் மாணவர்களுக்கு படிப்பதற்கு கூட தாட்கோ வங்கி மூலம் கடன் கொடுத்து கல்வி கற்பதற்கு சட்டத்தின் மூலம் வழிவகை செய்துள்ளார்கள்.

மேலும் ஒரு தொலை நோக்கு சிந்தனையுடன் இந்தியாவில் எந்த முதலமைச்சருக்கும் வராத சிந்தனை நம்முடைய முதலமைச்சருக்கு வந்ததின் அடிப்படையில் முதலமைச்சர் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள்.

அந்த வகையில் ஒரு தாய்க்கு ஒரு தாயாக மாறி காலை உணவு திட்டத்தை உருவாக்கிஉன்னதமான ஒரு திட்டத்தை இந்தியாவிற்கு வழிகாட்டியாகவும் தமிழகத்தில் காலை உணவு திட்டத்தின் மூலமாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பிள்ளைகளும் கல்வி கற்பதற்காக இத்திட்டத்தை முதலமைச்சர் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தி உள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் புகழாரம் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,நகர செயலாளர் கார்த்திக்,வட்டார கல்வி அலுவலர் சிவகுமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் முன்வர், கல்யாணி ஜாக்கி, பேரூரட்சி கவுன்சிலர்கள் நூர்ஜகான் ஜாபர், மோகன், மகாலட்சுமி கமலநாதன், நிர்வாகிகள் இக்பால், முன்னால் தலைவர் முனுசாமி, பாலு,லியாகத் அலி, தாஜ்ஜுதின், வாகீத், குப்புசாமி, மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பழனி, செந்தில், தொண்டரணி பாஷா, ஜி.டி.தனசேகரன், ஜே.எஸ்.சர்தார். செந்தில்குமார், பிலால், இம்ரான், ஷாஜகான் ஆஜீஸ் ஷகீல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சைதை மேற்குப் பகுதி - முன்னாள் வட்டச் செயலாளர்

# சைதை கோ.மதிவாணன் மறைவு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அஞ்சலி!



சென்னை, ஆக 31- சைதை மேற்கு பகுதி 139 வது வட்ட மாவட்ட பிரதிநிதி முன்னாள் வட்டக் கழக செயலாளர் சைதை கோ.மதிவாணன் 29.8.2023 அன்று காலை 5 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., துணை மேயர், மு மகேஷ் குமார், எம் கிருஷ்ண மூர்த்தி எம்.சி. இரா துரை ராஜ் எம்.சி. எஸ். குணசேகரன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., சைதை மா.அன்பரசன், சைதை சம்பத், சைதை சாதிக், ஆர்கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், கோ.பாஸ்கர், அஞ்சல் ராமன், தா மோகன் குமார் எம்.சி., ப.சுப்பிரமணி எம்.சி., களக்காடி எல்லப்பன், த.சம்பத், வி.பி.ஜானகிராமன், இ.முருகேசன், மு. ஆரோக்கியம், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், நா. தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, நேரு நகர் எஸ்.பாட்ஷா, கோட்டூர் க. மணி, கோட்டூர் சண்முகம், சின்னமலை ஆரி, எஸ்.ஆர் செந்தில், டி.என் சிவமணி ராமமூர்த்தி, அஞ்சுகம் நகர் வீரா, பாரி நகர் சசி, கு. புகழ் வேந்தன், ஜி பாபு, பால்கார் ரவி, ஜி கே ராமச்சந்திரன், வி.மதிவாணன், சைதை மஜித், கு.கார்த்திகேயன், ஆர்.டி.மூர்த்தி, மெடிக்கல் கார்த்திக், ஹரிபாபு, ஏ.எஸ். பழனி தீனதயாளன், கரிமுல்லா, தமிழ் அன்சாரி, வெபுருஷோத்தமன், மு.காளியப்பன், த.மணி, சார்பு சரவணன், சுரேஷ், ராஜா ஆறுமுகம், ம.சுகுமார் தீபன், இரா சத்யா, பா. மோ.கார்த்திக், அருண் கண்ணதாசன், இ.பி.ஆனந்தன், மு.அஜிம், மங்கையர் திலகம், சி.ஆறுமுகம், எஸ்.ரவி, ஜிம் பிரபு கி.தினேஷ், மு.காத்தவராயன், நியூ காலனி சம்பத், ஆட்டோ குணா, துளசி வினோத், ஜெ.ரவிச்சந்திரன், ஆட்டோ பாஸ்கர், சேகர் நகர் பாஸ்கர், ஆர்.மைக்கல், ஆர். கன்னியப்பன், வ.இளங்கோ, வ.ரஜினி, துளசி, எம்.சுந்தரேசன், ஆ.வரதன், வே.கோதண்டம், வழக்கறிஞர் பரத்குமார், பி.எஸ்.முருகன், சாந்தி சுந்தரம், அ.அயாத்பாஷா, சாந்தி சுந்தரம், சுமதி தீனதயாளன், இ.வரதன், பி.எஸ். பிரகாஷ், பூபதி வெங்கடேசன், கொடி சுரேஷ், எஸ் முகமது அலி, யமஹா ராஜேஷ்,

ஜி.ஏழுமலை கோபால், ஏ.சுப்பிரமணி, வி.சபரி, து. முரளி, என்.சந்திரன், கோபால், வி.பி.சிவகுமார், எம்.ஜெ.கெவின், கு.சுகுமார், காரைக்குடி செல்வம், எஸ். நித்யானந்தம், சீ.வி.பிரவீன், விஜபி சுரேஷ், ஆர்.தண்டபாணி, வி.எம்.கே.சரத், ஈ.பி. எழில், ரமேஷ், மு.கார்த்திக், கார்ஒட்டி கண்ணன், ஆர். அருண், எம்.அருண், ரியாஸ், சார்பு சரவணன், வா.ராஜா, எஸ்.கங்காதரன், கே.கஜேந்திரன், கமலா அம்மாள், ஆர். சிவலிங்கம், ஆதிகேசவன், எஸ்.கங்காதரன், வி.விஜயகுமார், மூர்த்தி, நா.மணி, வழக்கறிஞர் வினோத், வழக்கறிஞர் நரேஷ், வி.எம்.கே. பிரசாந்த், வி.எஸ்.எம். கார்டன் அஜித் குமார், போட்டோ ரவி, ஆர்.வி.நகர் யுவராஜ், பட்டாபி, சாரதி நகர் வேலா, எஸ்.பி. தீனா, எம்.கிருஷ்ணா, முல்லை, ஆயில் சரவணன், ஸ்மார்ட் விக்கி, விமல் ஆகியோர் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

தி.மு.க. வழக்கறிஞர் அணி

# புதியதாக நியமிக்கப்பட்ட மாவட்ட தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி. அறிவிப்பு!

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாவட்ட தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 2.9.2023 சனிக்கிழமை காலை 9.00 மணி அளவில், சென்னை, எழும்பூர், இம்பிரீயல் ஒட்டலில் உள்ள "ஃபயஸ் மகாலில்", எனது தலைமையில், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு, விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி., சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை ஆகியோர் சிறப்புரையாற்றிட நடைபெறும்.

இக்கூட்டத்தில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், தலைமைக் கழக வழக்கறிஞர்கள் மற்றும் புதியதாக நியமிக்கப்பட்ட மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா.

2. புதிய உறுப்பினர்கள் சேர்த்தல், புதுப்பித்தல்

3. புதியதாக நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் அறிமுகம், குறித்து.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை-18.
நாள்: 29.8.2023.

**என்.ஆர்.இளங்கோ, எம்.பி.**
செயலாளர்,
தி.மு.க. சட்டத்துறை.



சென்னை, மதுரவாயலில் நேற்று முன்தினம் (29.08.2023) துண்டலம் கிராமத்தில் அமைந்துள்ள 'தமிழ்த்தென்றல்' வி.கலியாணசுந்தரனார் அவர்களின் நூலகத்தை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டார். உடன் சட்டமன்ற உறுப்பினர் க.கணபதி உள்ளார்.

# நெல்லை மண்டல தி.மு.க. பொறியாளர் அணி கூட்டம்!

நெல்லை, ஆக. 31- நெல்லை மண்டல தி.மு.க பொறியாளர் அணி ஆலோசனை கூட்டம் பாளையங்கோட்டை ஆர்யாஸ் ஏ.சி மஹாலில் பொறியாளர் அணி தலைவர் துரை.கி.சரவணன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநில பொறியாளர் அணி செயலாளர் கு. கருணாநிதி சிறப்புரையாற்றினார்.

நெல்லை மண்டல பொறுப்பாளர்,மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் சி.பிரதீப் மற்றும் மாநில துணைச் செயலாளர் வே.உமாகாந்த் ஆகியர் முன்னிலை வகித்தனர்.

தலைமை கழகம் அறிவித்த கலைஞர்நூற்றாண்டு விழாவை தி.மு.க. பொறியாளர் அணி சார்பாக மாநிலம் முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பொறியியல் கல்லூரிகளில் பேச்சுப்போட்டி, கவியரங்கம், பட்டிமன்ற நிகழ்ச்சிகளை நடத்துவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை நெல்லை கிழக்கு மாவட்ட அமைப்பாளர் அருணன் செய்திருந்தார். நெல்லை மத்திய மாவட்ட துணை அமைப்பாளர் அருள்வின் ரெற்றிக்கோ நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**க.வே. செழியன்**
**ஆகஸ்ட் 31 (2022)**



**தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.**

**1975ஆம் ஆண்டு தனது பகுதியில் உதயசூரியன் நற்பணி மன்றம் தொடங்கி, பின்னர் பெரியார் எழுச்சி மன்ற காப்பாளராகவும், பின்னர் வட்டக் கழகத்தில் பகுதி பிரதிநிதியாகவும் திருவல்லிக்கேணி பகுதி துணைச் செயலாளராகவும், பொறுப்பாளராகவும் பொறுப்பு வகித்து, அதனைத் தொடர்ந்து பகுதிக் கழகச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேலாக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றிவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**"திருவல்லிக்கேணியில் கழகம் வளர்த்த உண்மைத் தொண்டர்" என தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தமிழர்களின் பண்பாட்டு வேர்களைத் தேடி!

**தொ**ன்மைக் காலம் தொடங்கி, தமிழர் இனம் தனக்கென்ற தனித்த வாழ்வியல் நாகரிகத்தையும் பண்பாட்டையும் வளர்த்து வந்துள்ளனர். தமிழர்களின் நாகரிகம் ஆழ்கடந்து அயல் நாடுகளிலும் பரவியுள்ளன என்பதற்கான சான்றுகளும், தடயங்களும் இன்றும் காணலாம். பழந்தமிழரின் வாழ்க்கை முறைகளையும் பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு சங்க இலக்கியங்களும், அகழாய்வு ஆதாரங்களும் நமக்கு பெரிதும் பயன் படுகின்றன. சங்க இலக்கியங்கள் பல அரிய வாழ்வியல் அறநெறிகளை வெளிப்படுத்துகின்றன.

அறம், பொருள், இன்பம் என்ற வாழ்வியல் தத்துவங்களின் அடிப்படையில் அமைந்த இலக்கியங்கள்.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர் தர வாரா"**

என்ற மிக உயர்ந்த மனிதநேயக் கோட்பாட்டை சங்கப்புலவர் கணியன் பூங்குன்றனார் தன் பாடலில் தெரிவிக்கிறார்.

**"ஒன்றே குலம், ஒருவனே தேவன்**
**நன்றே நினைமின் நமன் இல்லை நாணாமே"**

என்பது திருமூலரின் திருவாக்கு.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான். (குறள் 972)**

மனித குலம் முழுமையும் ஒன்றுதான் - தாழ்ந்தவர் என்ற பாகுபாடு பிறப்பில் இல்லை, இறைவனும் ஒருவனே. எப்போதும் எவருக்கும் நல்லதையே நினையுங்கள் ஏழையின்

சிரிப்பில் இறைவனைக் காணுங்கள் என்ற உன்னத தத்துவத்தை தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் கொள்கையாக நமக்கு தந்துள்ளார்.

பல நூற்றாண்டுகள் காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம் மற்றும் அடிமை முறைகளை கடைபிடித்துவிட்டு, இன்று தனிமனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கிறது மேற்கத்திய நாடுகள். ஆனால் தமிழ் சமூகம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஏற்றத்தாழ்வுகளற்ற சமத்துவ சமூக அமைப்புகள் கருத்தை பறைசாற்றிய வான்புகழ் பெற்ற திருவள்ளுவர் வாழ்ந்ததும் இத்தமிழ் நிலமே!

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு. (குறள் 423)**

எத்தகைய கருத்தை எவர் சொன்னாலும் அக்கருத்தின் உண்மையை ஆராய்ந்த தெளிவது தான் அறிவுடைமையாகும் என்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் உரை எழுதியுள்ளார். இதைவிட ஒரு சிறந்த பகுத்தறிவு விளக்கத்தை யார் கூற இயலும்? எனவே பண்டைய காலம் முதல் பகுத்தாய்வு என்ற தமிழர்களின் பண்பாட்டு மரபில் ஒன்றாகும் என்பதை நாம் அறிகிறோம். தமிழர்களுக்கு தங்கள் இனத்தின் தோற்றம் பற்றிய சரியான புரிதல் இருக்க வேண்டும். "கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி" என்ற கூற்றை மெய்ப்பிக்க இன்று பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. அகழ்வாராய்ச்சிகளும் அந்தக் கூற்றை மெய்ப்பித்துக் கொண்டிருக்கின்றன. குமரிக்கண்டம் என்பதுதான் தமிழகத்தின் தாயகம் என்றும் அறியப்படுகிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இங்கே மிக உயர்ந்த நாகரிகம் பரவியிருந்தாக வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இதன் குறிப்புகள் புறநானூற்றிலும், சிலப்பதி காரத்திலும் இருக்கிறது. எனவே உலகின் தொன்மையான குடி தமிழ்குடி என்றும் இங்கிருந்துதான் மக்கள் பல்வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்தனர் என்றும் கூறப்படுகிறது. சிலர் தமிழகத்தை விட்டு வெளியேறி சென்று மத்திய தரைக் கடற் பகுதியில் குடியேறி பின்பு பல நாகரிகங்கள் வளர்வதற்கு அடித்தளம் அமைத்தனர் என்றும் சுமேரிய மெசபடோமியா மக்களின் மொழி, உருவ ஒற்றுமை, அவர்களின் கலை, வரலாற்று நினைவு சின்னங்கள் திராவிட இனத்தோடு ஒன்றியிருப்பதாக கூறப்படுகிறது. பி.டி. சீனிவாச ஐயங்கார் தமிழர்கள் வரலாறு (P.T.Srinivas Iyengar's History Of the Tamils) என்ற புத்தகத்திலும் மற்றும் டி.ஆர். சேஷா ஐயங்காரின் திராவிட இந்தியா (T.R. Seshya Iyengar's Dravidian India) என்ற புத்தகத்திலும் இந்த கொள்கைக்கு பேராதரவு கொடுத்துள்ளனர்.

குமரிக்கண்டத்தை ஆட்சி செய்த முற்காலப் பாண்டியர்கள் காலத்தில் தான் தமிழ் இலக்கிய கல்வியாளர்கள் உருவாக்கிய முதல் இரண்டு சங்கங்கள் இருந்ததாக இங்கே இறையனார் அகப்பொருள் உரை என்ற இலக்கண நூலில் கூறப்பட்டுள்ளது. மேலும் வில்லியம் ஸ்காட் (William Scott) என்ற ஆங்கிலேயே அறிஞர் (The Lost Land of Lemuria) என்ற புத்தகத்தில் தெளிவாக விவரித்துள்ளார். அதுவே "குமரிக்கண்டம்" என்று பெயர் பெற்றுள்ளது. "திரைகடலோடியும் திரவியம்தேடு" என்பது போல் பண்டைய தமிழர்கள் கிரேக்கம், ரோமாபுரி, எகிப்து,பாலஸ்தீனம்,மெசபடோமியா, பாபிலோனியா ஆகிய நாடுகளுடன் வணிக தொடர்பு வைத்திருந்தனர் எரித்திரியக்கடல் வழிகையேடு என்ற வரலாற்று நூல் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது. இதில் மேலை நாடுகளுடன் தமிழ் மக்கள் கொண்டிருந்த வணிக தொடர்புகளைக் குறிப்பிடுகிறது.

Pliny the Elder 6 The National History LDMILD Ptolemy's Geographical accounts

நூல்களில் பண்டைய தமிழகத்தில் வணிகம் நடைபெற்ற பல்வேறு துறைமுகங்கள் பற்றிய குறிப்புள்ளது.

**யவனர் வந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னோடு வந்து கறியொடு பெயரும்**
**வளங்கெழு முசிறி (அகம் 149:911)**

யவனர்கள் தங்கள் கப்பலின் பொன்னைக் தமிழகத்துக்கு கொண்டுவந்தனர். அவர்கள் தாய் நாடு திரும்பியபோது அதே கப்பலில் யானையையும், யானைத்தந்தத்தையும் ஏற்றிச்சென்றனர்.

பண்டைய மதுரை ஒரு வணிக நகரமாக விளங்கியது. ரோமானிய வணிகர்கள் பலர் பண்டைய மதுரையில் யவனச்சேரிகளை அமைத்து வணிகம் செய்தனர். இவர்கள் வெளிநாட்டினர்களுக்கு உதவியாக இருந்தனர், மேலும் இவர்கள் மன்னர்களின் மெய்க்காப்பாளர்களாக இருந்துள்ளனர். மதுரையில் தங்கியிருந்த யவனர்களிடமிருந்து தான் தமிழகத்தினைப் பற்றிய செய்திகளை தாம் கேட்டறிந்ததாகப் பிளினி கூறுகிறார். அதேபோல் நைல் நதியின் துறைமுகப் பட்டினமான அலெக்ஸான்ட்ரியாவில் நூற்றாண்டுகளில் தமிழர்கள் வாழ்ந்து வந்தனர். எனவே வாஸ்கோடகாமா தான் தென்னிந்தியாவிற்கு கடல் வழியாக வந்த முதல் ஐரோப்பியர் என்ற கூற்று தவறான தாகும்.

### தமிழர் பண்பாடு

மொழி என்பது தமிழர்களின் உயிர்நாடியாக இருந்துவந்துள்ளது. தமிழைப் போற்றி வளர்ப்பது தமிழகப் புலவர்களை பாராட்டி பரிசுகள் வழங்குவது. தமிழ் மன்னர்களின் கடமைகளில் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது. மொழிக்கு மட்டுமின்றி மக்களின் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்து கொண்ட பெருமை பழந்தமிழரைச் சாரும். தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே திணைகள் வழக்கில் இருந்து வந்தன. மொழியானது பல காலம் வளர்ச்சி பெற்ற பிறகு தான் அதற்கு இலக்கண விதிமுறைகள் வகுக்க முடியும், அதேபோல் வாழ்க்கையிலும் வளர்ச்சிபெற்று நிலைத்து வாழும் சமூகத்திற்கு தான் சமூக முறையைக்கட்டமைக்க முடியும். எனவே பொருள் இலக்கணம் தோன்றுவதற்கு முன்பே மக்கள் உயர்ந்த வாழ்க்கை நெறியைப் பின்பற்றி வந்தனர் என்பதில் ஐயமில்லை!

வேளாண்மை, வணிகம், காதல் மற்றும் வீரம் தமிழர்களின் முக்கியப் பண்பாடாக இருந்தது. இதைத்தான் சங்க இலக்கியங்கள் பாராட்டின. பழந்தமிழர்கள் இல்லற வாழ்க்கையைப் பெரிதும் போற்றி வந்தனர். ஆண், பெண் இருவரும் கற்பு நெறியில் வழுவாமல் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதே தமிழரின் பண்பாடு காதல் திருமணங்கள் நடைபெற்றதற்கான சான்றுகள் உள்ளன. சாதி வேறுபாடுகளற்ற சமூகமாக இருந்துள்ளது. மேலும் திருமணங்களில் மணமகன், மணமகளுக்கு தாலி கட்டும் வழக்கம் கி.பி. பத்தாம் நூற்றாண்டுக்கு முன்பு ஏற்படவில்லை. இந்த வழக்கத்தை தெரிவிக்கும் முதல் கல்வெட்டு கி.பி.958 ஆம் ஆண்டுக்குரியதாகும்.

### கடவுளும் சமயமும்

பண்டைய தமிழ் சமூகம் அறத்தைப் போற்றக் கூடிய ஐந்து திணைகளுக்கும் ஐந்து கடவுள்கள் வழிப்பாட்டுக் குரியவர்களாக இருந்தனர். சேயோன், மாயோன், வேந்தன்,வருணன், கொற்றவை ஆகிய இயற்கை இயைந்த தெய்வங்களை வழிபட்டனர்.

இப்படி பன்முகத்தன்மையை ஏற்கக் கூடிய

மரபாக இருந்தது. தமிழக மெய்யியல் கோட்பாட்டில் முன்னோர்களை வழிபட கூடிய வழக்கம் தமிழர்கள் இடையே இருந்தது. வீரத்தை போற்றக் கூடிய சமூகம் என்பதால் இறந்த வீரர்களுடைய நினைவிடத்தில் நினைவுக் கல்நட்டு வைக்கப்பட்டது அதுதான் நடுகல் ஆகும். நடுகல் வழிபாடு தான் கால மாற்றத்தால் சிறு தெய்வங்களாக பரிணாமம் பெற்றிருக்கிறது.

### பெண்களை போற்றக்கூடிய சமூகம்

பழந்தமிழர்கள் பல இனக்குழுவாக வாழ்ந்த காலகட்டத்தில் அவ்வினக்குழுவுக்கு தாயே தலைமை ஏற்றாள். அக்கால கட்டத்தில் இக்குழுவினர் முதன்முதலாக வேளாண்மைத் தொழிலில் வெற்றி பெற்றுத் திகழ்ந்தனர். மேலும் அச்சமுதாயம் தாய் வழிச் சமுதாயம் எனப்பட்டது. தாயே குடும்பத்தின் தலைவியாக பண்டைய தமிழ் சமுதாயத்திற்கு வழிகாட்டினர்.

மனித சமூகத்தில் மக்களின் பெருக்கம், உணவு உற்பத்திப் பெருக்கம், கால்நடை பெருக்கம், மழை இவற்றிற்காகவும் நோய்களிலிருந்து காக்கவும் தாய்தெய்வ வழிபாடு தோன்றியதாக பேராசிரியர் தொ. பரமசிவன் கூறுகிறார்.

சங்க இலக்கியங்களில் தாய்தெய்வ வழிபாடு காடுகளில் தான் நடந்திருக்கிறது. இப்போது காடுகளில் சென்று வணங்குவது என்பது அரிதாகி விட்டது.

ஆண்களைப் போல் பெண் கவிஞர்களும் கவிஞர்களும் பெண் துறவிகளும் வாழ்ந்திருந்தனர். சிலப்பதிகாரத்தில் வருகின்ற கவுந்தியடிகள் கூட "ஆசிவகப் பெண் துறவி" என்று கூறப்படுகிறது.

### தமிழக மெய்யியல் கோட்பாடு

இந்திய மெய்யியல் கோட்பாட்டில் பொருள் முதல் வாத கோட்பாடு மற்றும் கருத்து முதல் வாத கோட்பாடு என்று இரு பிரிவுகளாக இருக்கின்றது.

சடங்குகள் மற்றும் வேதங்களையும், வேத அதிகாரங்களையும் மறுக்கக் கூடியது "நாத்திக மரபு". தந்தை பெரியாரின் சிந்தனை மரபுகள் பண்டைய இந்தியாவிலும் முக்கியமாக தமிழகத்தில் பலராலும் பின்பற்றப்பட்டு வந்து இருக்கின்றது. பொருள் முதல் வாத கோட்பாட்டின் அடிப்படையில் இந்த உலகம் அணுக்களால் ஆனது, மனித வாழ்க்கையில் ஆன்மா, கடவுள், மறு பிறவி, கர்மவினை என்பதெல்லாம் கிடையாது. வாழ்க்கையில் எதுவுமே நிரந்தரமானது கிடையாது, எல்லாம் மாறக் கூடியது. மாற்றம் ஒன்றே மாறாதது. சரியான பகுத்தாய்வும் அறிவு ஒன்றே மனிதனை துன்பத்திலிருந்து மீட்கக்கூடியது. இதைத்தான் ஆங்கிலத்தில் (Idealism VS Materialism) அழைக்கப்படுகிறது. இந்தக் கோட்பாட்டை தான் உலகாயதம் (Lokayutha) என்ற தனது புத்தகத்தில் (Debi Prasad Chatopadya) என்ற மார்க்சிய மெய்யியலாளர் எடுத்து விளக்குகிறார்.

(The Wonder that was India) என்ற புத்தகத்தில் A.L. Bhasam அவர்கள் Ajeevikaஆசிவகம் என்ற பொருள் முதல் வாத கோட்பாட்டை கடைபிடித்த மதத்தை பற்றி கூறுகிறார். இதை தான் தமிழில் பேராசிரியர் நெடுஞ்செழியன் அவர்கள் ஆசிவகம் தமிழர்களுடைய ஆதி மதம், அதை தான் ஒவ்வொரு ஊரிலும் அய்யனார் வழிபாடாக கடைபிடிக்கப்படுகின்றது. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் வாழ்வை செம்மைப்படுத்திய சமயம் ஆசிவகம் என்று கூறும் பேராசிரியர் நெடுஞ்செழியன், ஆசிவகத்தின் தொல் எச்சங்களையும் தன் தமிழறிவின்

துணிவுடன் நுட்பமாக எழுதியுள்ளார். ஆசிவகம் என்பது தமிழர்களின் ஆதிச்சமயம், புராணக் கதைகளைக் கொண்டு கட்டமைக்கப்படாத அறிவார்ந்த வாழ்க்கை முறையை சொல்ல கூடியது. தென்மாவட்டங்களில் கடைபிடிக்க கூடிய முளைப்பாரி விழா, இறப்பை கூடிக் கொண்டாடி அடக்கம் செய்வது ஆகியவை ஆசீவக வழிபாட்டின் தொடர்ச்சியாக கருதப்படுகின்றது. தமிழ் சமூகத்தில் தொல்குடி மரபுகள் சில தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது. ஆனால் சில மரபுகள் சாதிய அமைப்புகளால் அழிக்கப்பட்டுவிட்டன என்பதையும் அவர் விளக்கு கிறார்.

### தமிழர்களின் பெருமை கீழடி

சங்க இலக்கியம் போன்ற வளம் மிகுந்த இலக்கியச் செல்வம் நம்மிடையே இருந்தும், தொல்லியல் ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிராத நிலையில் தமிழ் நிலத்தின் தொன்மை வரலாற்று ஆய்வாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படாமல் இருந்து வந்தது. அந்த பாராமுகத்தை கீழடி திருப்பிப்போட்டது. வைகை நதி நாகரிகம் 2,600 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்லியல் எச்சங்களுடன் தமிழ்நாட்டின் வரலாற்று தொன்மையான ஆதாரங்களை முன்வைத்து உலகத்தை திருப்பி பார்க்க வைத்துள்ளது.

கீழடியில் கிடைத்த தொல்லியல் சான்றுகள் மூலம் கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலேயே எழுத்தறிவு பெற்ற நகர நாகரிகத்துடன் தமிழர்கள் வாழ்ந்திருப்பதை உலகுக்கு பறைசாற்றும் வகையில் நமது முதலமைச்சர் அவர்கள் ரூ.188 கோடி பொருட்செலவில் அருங்காட்சியகத்தை திறந்துள்ளார். தமிழர்களின் பண்டைய வரலாற்றின் அடையாளச் சின்னமான கீழடி, தமிழர் பெருமையை உலகு எங்கும் கொண்டு சென்றுள்ளது. கீழடி பல சோதனைகளை தாண்டி தமிழர்களின் கனவு மெய்ப்பட செய்த நமது முதலமைச்சர் அவர்களை வரலாற்றுப் பேராசிரியர் என்ற முறையிலும் உலகெங்கும் வாழும் தமிழர்களின் சார்பாகவும் வாழ்வாங்கு வாழ வாழ்த்தி வணங்குகின்றோம்.


முனைவர் திருமதி.தேன்மொழி பொன்முத்துராமலிங்கம்,
நான் முதல்வன் ஒருங்கிணைப்பாளர்,
இணை பேராசிரியர்,
வரலாற்றுத் துறை,
இராணி மேரி கல்லூரி,
சென்னை






திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதி மண்டலம் 3யில் வார்டு எண் 16 ல் விஷ்வாஷ் நகர் இரண்டாவது வீதியில் மாநகராட்சி பொது நிதி ரூ.7 லட்சம் மதிப்பிட்டில் உயர் மின் விளக்கு கோபுரத்தை வார்டு மாமன்ற உறுப்பினரும் மண்டலம் 3 ன் தலைவருமான மதிவாணன் தலைமையில் திருச்சி தெற்கு மாவட்ட செயலாளரும், அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி மக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் உதவி ஆணையர் ரமேஷ் குமார், பொறியாளர் ஜெகஜீவராமன், இளநிலை பொறியாளர் சீனிவாசன், பகுதி செயலாளர் ஏ.எம்.ஜி. விஜய் குமார், வட்டச் செயலாளர்கள் சண்முகம், தங்கவேல் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர் .

வாகை சந்திரசேகர் - நடிகர் வாசு விக்ரம் சிறப்புரை! சென்னை கிழக்கு மாவட்ட

## கலை-இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் திராவிட தமிழ்ப் பள்ளி நிகழ்ச்சி!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. - மேயர் ஆர்.பிரியா பங்கேற்பு!

*சென்னை, ஆக. 31 -* சென்னை கிழக்கு மாவட்டம் - கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை சார்பில் கலைஞர் 100 - 31வது நிகழ்வாக, நாளை(01.09.2023-வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில், சூளை அங்காளம்மன் கோவில் அருகில், திரைவானின் விடிவெள்ளி! திராவிட தமிழ் பள்ளி! என்ற தலைப்பில், மாவட்ட அமைப்பாளர் புரசை ஜி.தாமோதரன் தலைமையில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் தலைவர் பி.கே.சேகர்பாபு மற்றும் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலையில் நடைபெறுகிறது.

இவ்நிகழ்வில் எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் மற்றும் நியமன குழு உறுப்பினர் சொ.வேலு, எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம். நாதன், மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன், மாவட்ட துணைச் செயலாளர் புனிதவதி எத்திராசன், கழக அயலக அணி துணை செயலாளர் பரிதி இளம்சுருதி, மாவட்ட மகளிர்-தொண்டர் அணி அமைப்பாளர் ராஜேஸ்வரி ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர்கள் அ.நிர்மலா தேவி மற்றும் கோ.மணி, 108வது வட்ட கழக செயலாளர் எஸ். சுந்தர்ராசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் க.வினோத், ஆர்.டி.சங்கர்நானா, நெசவாளர் அணி மாவட்ட தலைவர் கே. கோகுல், மற்றும் சிறப்பு பொதுக்குழு உறுப்பினர் கா.நந்தீஸ்வரன் கலந்து கொள்கின்றனர்.

இதில் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட தலைவர் நடிகர் வாகை சந்திரசேகர், துணை தலைவர் நடிகர் வாசு விக்ரம், கழக மக்கள் செய்தி தொடர்பு பிரிவு துணை தலைவர் திருமதி ஆண்டாள் பிரியதர்ஷினி ஆகியோர், தலைமை செயற்குழு உறுப்பினர் புகழுரை ஆற்றுகின்றனர். மேயர் ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், ப. தாயகம் கவி, அ.வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல் கலந்துகொள்கின்றனர்.

இதில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் சேப்பாக்கம் கே.ராஜி, எல்.பாண்டுரங்கன், எம்.ஜி. செல்வம், டி. இந்திரஜித், கணல் கே.கங்கா, ஆர்.பி ரமேஷ், எஸ்.துளசி குருபரன், எல்.ராமச்சந்திரன், ச.மோகன்ராஜ், எஸ். அன்புச்செல்வம், கே.ராமமூர்த்தி (எ) குட்டி, எஸ்.ஏ முகமது உசேன், எஸ்.பாண்டியன், ந.இளமுருகு ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர். நிகழ்வின் இறுதியில் ந.பாலு 78அ வட்ட கழக செயலாளர் மற்றும் சு.மனோகர் 78-வது வட்ட கழக செயலாளர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

திருவல்லிக்கேணி பகுதி அவைத் தலைவர்

## க.வே. செழியன் முதலாம் ஆண்டு அமைதிப் பேரணி!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் - நே.சிற்றரசு - தயாநிதிமாறன் எம்.பி. துவக்கி வைக்கின்றனர்!

*சென்னை, ஆக. 31 -* திருவல்லிக்கேணி பகுதி அவைத் தலைவர் மறைந்த க.வே. செழியன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளையொட்டை அமைதிப் பேரணியும் சமபந்தி விருந்தும் இன்று (31.8.2023) நடைபெறுகிறது.

அமைதிப் பேரணி இன்று (31.8.2023) காலை 7 மணிக்கு இராயபேட்டை வி.எம். தெரு - பெரியார் சிலை அருகிலிருந்து புறப்படுகிறது. சமபந்தி விருந்து இன்று பிற்பகல் 12 மணியளவில் பூரம் பிரகாசம் தெருவில் நடைபெறுகிறது.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் பேரணி மற்றும் சமபந்தி விருந்தை தொடங்கி வைக்கின்றனர்.

பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் தலைமை வகிக்கவும், மாவட்டத் துணைச் செயலாளர் ஆர்.என். துரை, வி.என். ராஜன் முன்னிலை வகிக்கின்றனர்.

மாமன்ற உறுப்பினர் வே. கமலா செழியன், ரவி ராஜ்குமார், ஆர்.பத்மாவதி, ஆர். ரஞ்சித் குமார், எல். பாலு, எஸ். ரவீந்திரன் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சிகளில் இரா. உமாபதி, ஆர். சின்னி கிருஷ்ணன், ஆனந்த சீனிவாசன், உசேன், டாக்டர் ரப்பானி மற்றும் கழக முன்னணியினர் பங்கேற்கின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை -119வது வட்டச் செயலாளர் க.வே. மோகன் செய்து வருகிறார்.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எஸ். சேகர்**

**ஆகஸ்ட் 31 (2020)**



தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

வட்டச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, நகர இளைஞர் அணி அமைப்பாளர், மூன்று முறை குமாரபாளையம் நகரச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

குமாரபாளையம் நகர்மன்ற உறுப்பினராக இரண்டு முறையும், 2006ல் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.




நாடாளுமன்ற நிலைக்குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையிலான நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள் மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் வட்டம், விளாச்சேரி கிராமத்தில் களிமண் பொம்மை தயாரிக்கும் தொழில் கூடம் மற்றும் ஒத்தக்கடை வேளாண் கல்லூரியில் விவசாய தொழில் முனைவோர் பாதுகாப்பு மையத்தினை (MABIF) பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா மற்றும் அதிகாரிகள் உள்ளனர்,

## பூவிருந்த வல்லியில் கபடிப் போட்டி!

சென்னை, ஆக. 31 – தமிழினத்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூந்தமல்லி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் செம்பரம்பாக்கம் ஊராட்சியில் கபடி போட்டி ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் நடைபெற்றது.

இதில் முன்னாள் அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் இறுதிப்போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பை மற்றும் பரிசு வழங்கினார். அருகில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, ஜி.ஆர். திருமலை, வி.குமார், ஏ.ஜனார்த்தனன், எம்.இளையான், ஏ.ஆர்.பாஸ்கர், எஸ். புகழேந்தி, ஆர்.பிரபாகரன், வி.பி.பிரகாஷ், பிரியாசெல்வம், எம்.சங்கரன், விநாயகம், டி.ராஜாமணி, சி.எம்.ஸ்ரீதர், ஜி.குமார், நா.கேசவன், எம்.கே.பாஸ்கர், முரளிதரன், கே.பி.ஞானமூர்த்தி, எஸ். மனோஜ்குமார், பரிமளழகன் உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.






கடலூர் மாவட்ட ஆட்சியரகத்தில், இந்திய ஒன்றியத்தின் மூவர்ணக் கொடியை 100 அடி உயரத்தில் ஏற்றுவதற்கு ஏதுவாக தமிழ்நாடு அரசு சார்பில் கொடிக்கம்பம் அமைக்கப்படவுள்ளது. அதற்காக ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று முன்தினம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார். அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசில், தமிழ்நாட்டின் ஒவ்வொரு துறையும் சாதனைச் சரித்திரம் படைத்து வருகிறது. அந்த வகையில், கடலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் அரசுத் திட்டப்பணிகள் தொடர்பான விளக்கக் காட்சி, கடலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. வேளாண் மற்றும் உழவர் நலன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு, ஊரக வளர்ச்சித்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், தோட்டக்கலைத் துறை, காவல்துறை, தீயணைப்புத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகள் ஒவ்வொன்றிற்கும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்று, அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த திட்டங்கள் தொடர்பான விவரங்களைக் கேட்டறிந்தார். இந்த விளக்கக் காட்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த அதிகாரிகள், அலுவலர்கள் பணியாளர்களைப் பாராட்டினார். வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கோ. அய்யப்பன் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.




கலைஞர் 100
1924 - 2023
ஆகஸ்ட் 31, மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
திருவள்ளூர் மாவட்ட அரசு வளர்ச்சி பணிகள் ஆய்வு
மற்றும்
இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் – ஆவடி
வருகை தரும்...
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக... வருக...
மாண்புமிகு இராணிப்பேட்டை ஆர்.காந்தி
கைத்தறி (ம) துணி நூல்துறை அமைச்சர் – இராணிப்பேட்டை மாவட்ட கழகச்செயலாளர்
ஆவடி சா.மு.நாசர் MLA.,
மு.அமைச்சர் – மத்திய மாவட்ட கழகச்செயலாளர்
திருத்தணி எஸ்.சந்திரன் MLA.,
மேற்கு மாவட்ட கழகச்செயலாளர்
டி.ஜெ.கோவிந்தராஜன் MLA.,
கிழக்கு மாவட்ட கழகச்செயலாளர்
ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட தி.மு.க.

## சேலம் மாநாட்டில் 50 ஆயிரம் பேர் சீருடை அணிந்து பங்கேற்பு!

# 3 ஆயிரம் பேருக்கு பொற்கிழி! அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

### சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமையில் நடந்த தெற்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரை!

மதுரை, ஆக. 31 -

மதுரை தெற்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் திருமங்கலத்தில் மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமையில் நடைபெற்றதில், மாவட்ட பொறுப்பாளரும் வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சருமான பி.மூர்த்தி கீழ்க்கண்டவாறு சிறப்புரையாற்றினார். அதன் விபரம் வருமாறு:-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இந்தியாவிற்கு எடுத்துக்காட்டாக எல்லோரும் வியக்கும் வகையில் நல்லாட்சி நடத்தி வருகின்றார் என்பது நாடே அறியும். அவ்வழியில் பின்பற்றும் நம் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாள்தோறும் பல்வேறு இடங்களுக்கு சென்று மக்கள் பணியையும், கழக பணியையும் ஆற்றுவதில் முன் உதாரணமாக திகழ்ந்து வருகின்றார்.

வரும் 20ஆம் தேதி திருமங்கலத்தில் மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் நடைபெற உள்ள மூத்த முன்னோடிகள் 3 ஆயிரம் பேருக்கு பொற்கிழி வழங்கும் விழா மற்றும் பல்லாயிரக்கணக்கான பூத் கமிட்டி உறுப்பினர், கழகத்தினருக்கு நிதி உதவி வழங்கி கௌரவிக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளார். அதுசமயம் அவருக்கு எழுச்சிமிகு வரவேற்பு கொடுத்திட வேண்டும், மேலும் வரலாற்று சிறப்புமிக்க மாநில இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு சேலத்தில் டிசம்பர் 17ம் தேதி நடைபெற உள்ளது, அதில் இளைஞர் அணியினர் சீருடை அணிந்து மிடுக்கான தோற்றத்துடன் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அணி வகுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் இதில் இளைஞர் அணி தம்பிமார்களையும் சேர்த்து சுமார் 50ஆயிரம் பேர் அணி அணியாய் புறப்பட்டு பங்கேற்க வேண்டும்.

அ.தி.மு.க.வினர் நடத்திய மாநாட்டை விட பல மடங்கு சிறப்பு சேர்க்கும் வகையில் இந்த இளைஞர் அணி மாநில மாநாடு இந்தியாவில் சாதனை படைக்கும் மாநாடாக அமையும். பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அரசுதான் நம் அரசு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெண்களுக்கு சுய உதவி குழுக்கள் கடன்களை தள்ளுபடி செய்தார், மேலும் 900 கோடி ரூபாய் மதுரை மாவட்ட மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வழங்கியுள்ளார், இதில் 450 கோடி ரூபாய் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது, மீதம் 450 கோடி ரூபாய் உள்ளது. இதனை மகளிர் சுயஉதவி குழுக்கள் பல்வேறு தொழில் கள் ஆரம்பித்து புரட்சி பெண்களாக வர வேண்டும் அவர்கள் கடனுதவி பெறுவதற்கான ஏற்பாடுகளை அனைத்து அதிகாரிகளும் செய்து தர வேண்டும்.

இந்தியா கூட்டணி மாபெரும் சக்தியாக விளங்குகின்றது தமிழ்நாட்டில் வரும் நாடாளுமன்ற தேர்தலில் அதிக வாக்குகள் வித்தியா சத்தில் 40 தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான கூட்டணி அமோக வெற்றி பெறும் என்பதில் மாற்றமில்லை என்று மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பேசினார் மதுரை தெற்கு மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டத்திற்கு தலைமை ஏற்று மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் பேசினார்.

இக்கூட்டத்திற்கு கழக நிர்வாகிகள் நாகராஜன், லதா அதியமான், கொம்பாடி தங்கம், ஏர்போர்ட் பாண்டியன், கே.இளம கிழன், செல்லம்பட்டி முத்துராமன், முத்துராமலிங்கம், கொடி சந்திரசேகர், பாசபிரபு, இளைஞர் அணி விமல், நகர்மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார், துணைத் தலைவர் ஆதவன் அதியமான் உள்ளிட்ட கழகத்தினர் முன்னிலை வகித்தனர், மற்றும் இக்கூட்டத்தில் மதுரை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதி நிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்றனர்.

---

## துரை.கி.சரவணன் தலைமை

# கடலூர் மண்டல கழக பொறியாளர் அணி ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கு.கருணாநிதி சிறப்புரையாற்றினர்!

கடலூர், ஆக. 31 -

கடலூர் மண்டல கழக பொறியாளர் அணி ஆலோசனைக் கூட்டம், வடலூர் மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில், 25-08-2023 அன்று நடைபெற்றது.

கடலூர் மண்டலத்திற்கு உட்பட்ட கடலூர் கிழக்கு, மேற்கு, விழுப்புரம் வடக்கு, தெற்கு, மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த கழக பொறியாளர் அணி அமைப்பா ளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள் ஆலோ சனைக் கூட்டம், மாநில பொறியாளர் அணி தலைவரும், முன்னாள் எம்.எல்.ஏவுமான துரை.கி.சரவணன் தலைமையில் நடைப்பெற்றது.

கடலூர் கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ப. அப்பு. சந்திரசேகரன் வரவேற்புரையாற்றினார். மாநில துணை செயலாளர் வேல்.உமாகாந்தி, சி.பிரதீப் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு. கருணாநிதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அனைத்து பொறியியல் கல்லூரிகள், தொழில்நுட்ப கல்லூரிகளில் பேச்சுப் போட்டிகள், கவியரங்கம், பட்டி மன்றங்கள் உள்ளிட்ட போட்டிகளை நடத்தி அதில் வெற்றிப் பெறுபவர்களை மாநில அளவில் நடைப்பெறும் போட்டிகளில் பங்கேற்க செய்து, பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்படும். மேலும் நலத்திட்ட உதவிகள் உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகளை நடத்துவது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்துக் கொண்டவர்கள் குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் வி.சிவக்குமார், கழக பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், ஜேம்ஸ் விஜயராகவன், வடலூர் நகரமன்ற தலைவர் சு.சிவக்குமார், நகர கழக செயலாளர் த.தமிழ் செல்வன், நகர மன்ற துணை தலைவர் சுப்புராயலு,

கடலூர் கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் ஜி.பி.ஸ்ரீராமன், எஸ்.டி.சரவணன், கே.பி.எம். கார்த்தி, ரே.கபேரன், எ.விக்னேஸ்வ ரன், து.ராஜராஜன், ம. னோத்குமார், கடலூர் மேற்கு மாவட்ட நிர்வாகி கள் என்.கார்த்திகேயன், கனக.செந்தில்நாதன், பாண்டுரங்கன், செம்பியன், நிரஞ்சன், ராம்சிங்,

மயிலாடுதுறை மாவட்ட நிர்வாகிகள் ஆர்.ராஜேஷ். ஜி.பி.கார்த்திகேயன். இரா. காழி.கலைவாணன், எம். ஜெமின், ஜி.வி.ஆர்.கார்த்திகேயன், இரா.சீத்தாராமன், சு.சிற்றரசன், எஸ்.ஜெயசந்திரன், எம்.நிக்கிலேஷ், கே. இளம்பரிதி,

விழுப்புரம் தெற்கு மாவட்ட நிர்வாகிகள் எஸ். சுரேஷ், வி.கே.கிருஷ்ண மூர்த்தி, புகழ்.செல்வகுமார், துரை.ஸடாலின், எம். பிரசாத், பி.ஆனந்தகுமார், டி.செந்தில்குமார், ஏ.ரீகன் ராஜ், விழுப்புரம் வடக்கு மாவட்ட நிர்வாகிகள் சி. சக்தி சரவணன், பெ.ஏழுமலை, சொ.செந்தில்முருகன், ஜி.பி.எஸ்.முருகன், செ.ரசூல் பாஷா, ப.சிவப்பிரகாசம், த.வெங்கடேசப் பெருமாளர், வே.மலையரன், த.மோகன்தாஸ், கி. பிரபாகரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

---

## இந்திய பொருளாதாரம் குறித்து கொஞ்சம் கூட கூசாமல் பொய் பேசும் மோடி!

# மக்களை பன்னாட்டு நிறுவனங்களின் சந்தையாகவே கருதுகிறார்!

### “தீக்கதிர்” நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஆக. 31 -

ஒன்றிய அரசின் கொள்கைகளால் கடந்த ஐந்தாண்டு காலத்தில் வறுமையிலிருந்து 13.50 கோடி மக்கள் மீட்கப்பட்டுள்ளதாக இந்திய பொருளதாரம் குறித்து பேசும் மோடி மக்களை பன்னாட்டு நிறுவனங்களின் சந்தையாகவே கருதுகிறார் என “தீக்கதிர்” நாளேடு 29.08.2023 தேதியிட்ட இதழில் “இவரது பொய்க்கு மட்டுமே வறுமை இல்லை” என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது. அது வருமாறு:


தீக்கதிர்
2023 ஆகஸ்ட் 29 செவ்வாய்க்கிழமை
இவரது பொய்க்கு மட்டுமே வறுமை இல்லை
ஒன்றிய அரசின் கொள்கைகளால் கடந்த ஐந்தாண்டு காலத்தில் வறுமையிலிருந்து 13.50 கோடி மக்கள் மீட்கப்பட்டுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார். ஜி20 நாடுகளின் வர்த்தக அமைப்பான 'பிசினஸ் 20' உச்சி மாநாட்டில் அவர் இவ்வாறு பேசியுள்ளார்.
ஆனால் இந்தியப் பொருளாதாரம் குறித்த தரவுகள் பிரதமரின் கூற்றை மறுப்பதாக உள்ளன. ஏழைகளுக்கு ஆதரவான கொள்கைகளை தமது அரசு கடைப்பிடிப்பதால் வறுமை நிலையிலிருந்து மக்கள் மீட்கப்பட்டு நடுத்தர வர்க்கத்தினராக உயர்ந்துள்ளதாக அவர் கொஞ்சம் கூட கூசாமல் கூறியுள்ளார்.
மோடி ஆட்சிக்கு வந்தபிறகு இந்தியாவில் வறுமை மற்றும் சமத்துவமின்மை அதிகரித்துள்ளதாக தேசிய மாதிரி கணக்கெடுப்பு கூறியுள்ளது. 2011-12இல் ரூ.1501ஆக இருந்த தனிநபர் நுகர்வோர் செலவினம் 2017-18இல் ரூ.1446ஆக குறைந்தது. கொரோனா காலகட்டத்தில் மோடி அரசின்

ஒன்றிய அரசின் கொள்கைகளால் கடந்த ஐந்தாண்டு காலத்தில் வறுமையிலிருந்து 13.50 கோடி மக்கள் மீட்கப்பட்டுள்ள தாக பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார். ஜி20 நாடுகளின் வர்த்தக அமைப்பான ‘பிசினஸ் 20’ உச்சி மாநாட்டில் அவர் இவ்வாறு பேசியுள்ளார்.

ஆனால் இந்தியப் பொருளாதாரம் குறித்த தரவுகள் பிரதமரின் கூற்றை மறுப்பதாக உள்ளன. ஏழைகளுக்கு ஆதரவான கொள்கைகளை தமது அரசு கடைப்பிடிப்பதால் வறுமை நிலையிலிருந்து மக்கள் மீட்கப்பட்டு நடுத்தர வர்க்கத்தினராக உயர்ந்துள்ளதாக அவர் கொஞ்சம் கூட கூசாமல் கூறியுள்ளார்.

மோடி ஆட்சிக்கு வந்தபிறகு இந்தியாவில் வறுமை மற்றும் சமத்துவமின்மை அதிகரித்துள்ளதாக தேசிய மாதிரி கணக்கெடுப்பு கூறியுள்ளது. 2011-12இல் ரூ.1501ஆக இருந்த தனிநபர் நுகர்வோர் செலவினம் 2017-18இல் ரூ.1446ஆக குறைந்தது. கொரோனா காலகட்டத்தில் மோடி அரசின் தவறான அணுகுமுறையால் புலம் பெயர் தொழிலாளர்கள் இந்தியாவின் குறுக்கும் நெடுக்குமாக நடந்து சென்ற காட்சியை எளிதில் மறந்துவிட முடியாது.

பணமதிப்பிழப்பு, ஜிஎஸ்டி வரி ஆகியவற்றால் நொறுங்கிப் போன இந்திய மக்களின் வாழ்க்கை கொரோனா முடக்கக் காலத்தில் மேலும் மோசமானது. அதிலிருந்து இந்திய மக்கள் மீளமுடியவில்லை. இந்தநிலையில் 13.50 கோடி மக்களை வறுமையிலிருந்து மீட்டுவிட்டதாக மோடி கூறுவதில் அர்த்தமில்லை.

கொரோனா காலத்தில் 150க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு தடுப்பு மருந்தை இந்தியா அனுப்பியது என்றும் பிரதமர் கூறியுள்ளார். ஆனால் தடுப்பூசி தயாரிப்பில் பொதுத்துறை நிறுவனங்களை புறக்கணித்து இரு தனியார் நிறுவனங்களுக்கே அனுமதி தந்ததோடு உள்நாட்டு மக்களுக்கே இலவசமாக தடுப்பூசி வழங்க மோடி அரசு முதலில் மறுத்ததை மறந்து விட முடியாது.

சந்திரயான் திட்டத்தில் தனியார் துறை பங்களிப்பும் இருந்ததாகக் கூறி ஜி20 நாடுகளின் பிரதிநிதிகளை குஷிப்படுத்த முயன்றுள்ளார் பிரதமர். விண்வெளித் துறையில் இதுவரை இந்தியா நிகழ்த்திய சாதனைகள் அனைத்திற்கும் இஸ்ரோ என்ற அரசு நிறுவனமே காரணமாகும். ஆனால் விண்வெளித்துறையிலும் தனியார் முதலீட்டை ஊக்குவிப்பதன் மூலம் எதிர்காலத்தில் அந்தத் துறையையும் கார்ப்பரேட் முதலாளிகளிடம் ஒப்படைத்து நாட்டை நட்டாற்றில் விட பா.ஜ.க. அரசு முடிவு செய்துவிட்டது என்பதையே பிரதமரின் பேச்சு உணர்த்துகிறது.

அடுத்த 5 7 ஆண்டுகளில் நடுத்தர மக்கள் தான் இந்தியாவில் அதிகமாக இருப்பார்கள் என்று கூறுவது உண்மையா என்பது ஒருபுற மிருக்க, மக்களை பன்னாட்டு நிறுவனங்களின் சந்தையாகவே பிரதமர் கருதுகிறார் என்பதே அவரது பேச்சின் உட்பொருளாகும்.

அவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

# மாணவர்தம் பசிப்பிணி மருத்துவர் மாமுதல்வரைக் காலங்கள் பாடும்!



தலைமுறை தலைமுறை தமிழ்நாடு
தழைக்கநம் முதல்வரின் மாணவர்
நிலைநிறை வயிற்றுக்குச் சோறிடல்
நிகரிலாத் திட்டம் வியப்பென்னே!

அற்றார் அழிபசி தீர்த்தலே
அகில வைப்பு நிதியென
வற்றா அமுதத் திருக்குறள்
வரையறுத்(து) அய்யன் எழுதினார்!

பற்றிலா வள்ளலார் அருளண்ணல்
பசிப்பிணி தீர்த்தலே வையகம்
மற்றைய அனைத்திலும் முதன்மையென
வயிற்றுக்(கு) உணவீதல் உயிர்க்காப்பே!

உன்னத முதன்மைநம் முதல்வரே
உயிர்தனைக் காக்கும் இறையென
மன்பதைப் **பசிப்பிணி மருத்துவர்**
மாநிலத் தமிழ்நாடு தோன்றலே!

இருளிடை வந்த கதிர்மதி
இளம்தளிர் மாணவர் மகிழ்வொளி
அருளிடை பூத்தவோர் அறநெறி
அணிஈகை முதல்வரின் உயர்வழி!


இரக்கமே உருவாக இணையிலா
**இஸ்டாலின்**நம் முதல்வரின் கருணையால்
வரமெனத் தவமெனப் பயில்பள்ளி
மாணவச் சிறுவர்கள் மகிழ்வம்மா!

பக்கமே அமர்ந்தே ஊட்டுவார்
பயிர்வாடும் நிலைபெய் முகிலென
செக்கவான் உதய ஒளியென
சிறுவர்சிந் தைஅமர் முதல்வரே!

காலங்கள் பாடிடும் சாதனை
கலைஞர்தம் வழிவந்த போதனை
இலாநிலை வறுமை வேதனை
**இஸ்டாலின்**மா முதல்வரின் மாற்றுவினை!

நெருப்பிலும் துஞ்சலாம் பசியெனும்
நெருப்பில் பயிலுதல் இயலாதே
பெருந்தகை முதல்வர் அறிந்திதைப்
பிள்ளைகள் பசிப்பிணி மருத்துவர்!

வையகம் ஈடிலா அருஞ்செயல்
வரலாறு படைத்தநம் முதல்வரே
கையகம் அமுதாகும் மாணவர்
காத்துநம் தலைமுறைகள் ஓங்கவே!



பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**

---

## தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

### டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட & மாநகர தலைவர், துணைத்தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கூட்டம் வருகிற 6.9 .2023 புதன்கிழமை அன்று சென்னை ராயப்பேட்டை புதிய கல்லூரி (The New College Marriage hall) திருமண மண்டபத்தில்,

காலை 10 மணிக்கு துவங்கும் இந்நிகழ்வில் கழக பொதுச்செயலாளர்; நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக துணைப் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர்; கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு பொறுப்பாளர் அந்தியூர் செல்வராஜ், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி. கே.எஸ். மஸ்தான், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றவிருக் கின்றனர்.

இதில், அனைத்து மாவட்ட, மாநகர கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:** முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை ஒட்டி, தலைவரின் சமூகநீதி மற்றும் மதச்சார்பின்மை கோட்பாடுகள், கொள்கைகள், செயல்பாடுகள்

உள்ளூர் நிகழ்ச்சிகளாக, ஆவணப்படங்களாக. கருத்தரங்கமாக, சமத்துவம் போற்றும் சமபந்தி உபசரிப்பாக நடத்துவது குறித்து.

**டாக்டர். அ. சுபேர்கான்**
செயலாளர்
தி.மு.க. சிறுபான்மையினர்
நல உரிமைப் பிரிவு.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.வி.எம்.அ. பொன்மொழி
### ஆகஸ்ட் 31 (2017)



பள்ளிப்பருவமாகிய 1965–ல் தான் பயின்ற பள்ளி மாணவர்களை ஒன்று திரட்டி, இந்தித் திணிப்பை எதிர்த்து போராட்டம் நடத்தியவர்.

ஒருங்கிணைந்த செங்கற்பட்டு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர், மாவட்ட இளைஞர் அணி முதல் அமைப்பாளர், மாவட்ட மாநாட்டு தொண்டர் படைத் தலைவர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட அவைத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு வங்கி தலைவராகவும், கலைஞர் பட்டுக் கூட்டுறவு சங்க இயக்குநராகவும், திருவள்ளூர் பட்டுக் கூட்டுறவு சங்க தலைவராகவும் பொறுப்பேற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“இவரின் நலப்பணிகள் என்றென்றும் மக்கள் மனதில் வீற்றிருக்கும். அவர் விட்டுச் சென்ற கழக பணிகள் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு தொண்டரின் உள்ளத்திலும் குடியிருக்கும்” என தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி
### ஆகஸ்ட் 31 (2012)



தென்பாண்டிச் சீமையில் கழகத்தை வளர்த்த மூத்த முன்னோடிகளில் ஒருவர்.

தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

கமுதி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.

கமுதி ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும், கழகத்தின் சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். ‘மிசா’வில் ஓராண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்தவர்.

“அனைவரிடமும் அன்பு காட்டி, அயராது உழைத்து கழகத்தை வளர்த்தவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## 3000-க்கும் மேற்பட்ட மருத்துவர் - மருத்துவப் பணியாளர்களுக்கு

# விரைவில் பணி நியமன ஆணைகள் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்!

### அரசு ஸ்டான்லி மருத்துவமனை நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, ஆக.31

தமிழ்நாடு முதல்வர் அவர்கள் மிக விரைவில் 3000க்கும் மேற்பட்ட மருத்துவர் மற்றும் மருத்துவ பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்குவார்கள் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பல்வேறு மருத்துவ வசதிகளை தொடங்கி வைத்து தெரிவித்தார்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (29.8.2023) சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பல்வேறு மருத்துவ வசதிகளை திறந்து வைத்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.30 இலட்சம் செலவில் உணர்திறன் மற்றும் செயல்திறன் மேம்பாட்டு பூங்கா திறந்து வைக்கப் பட்டுள்ளது. மேலும், இந்த உணர்ச்சி ஒருங்கிணைப்பு சிகிச்சை பூங்காவை பொறுத்தவரை இதன் மூலம் சிந்தனை ஒருமுகப்படுத்துதல், ஐம்புலன் உணர்வுகளை மேம்படுத்துதல், அறிவாற்றலை தூண்டுதல், மூளை செயல்பாட்டை அதிகரித்தல், விழிப்புணர்வை அதிகரித்தல், தசை வளர்ச்சி இயக்கம் மேம்படுத்துதல் போன்ற பல்வேறு பயன்கள் இதன் மூலம் கிடைக்கவிருக்கிறது. இந்த மருத்துவமனையை பொறுத்தவரை 50 முதல் 60 வரையிலான ஆட்டிசம் ஸ்பெக்ட்ராம் குறைபாடு உள்ள குழந்தைகள் இதன் மூலம் பயன்பெற இருக்கிறார்கள். அந்தப் பூங்கா இன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஆட்டிசம் ஸ்பெக்ட்ராம் குறைபாடு உள்ள குழந்தை களுக்கு பெரிய அளவிலான பயனுள்ளதாக இருக்கும்.

**ரூ.10 இலட்சம் செலவில் சிறு பிராணிகள் கூடம்**

அதேபோல் இன்று புனரமைக்கப்பட்ட பிராணிகள் கூடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. மாணவர்கள் பயன்பெறும் வகையில் தேசிய மருத்துவ ஆணையத்தின் பரிந்துரையின்படியும், ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் சிறு பிராணிகள் பராமரிக்கப்படும் கூடம் ஒன்று அமைக்கப்பட்டு அது தற்போது திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. எலி, முயல் போன்ற சிறு பிராணிகள் அதில் தங்க வைக்கப்பட்டு அதன் மூலம் மாணவர்களுக்கான ஒரு கற்றல் திறனை அவர்களுக்கு ஏற்படுத்துகின்ற வகையில் அது புனரமைக்கப்பட்டு இருக்கிறது. தேசிய மருத்துவ ஆணையத்திடம் ஐந்து ஆண்டுகளுக்கான அங்கீகாரம் இந்த மருத்துவமனைக்கு கிடைத்திருக்கிறது. அப்படி தேசிய மருத்துவ ஆணையத்திடம் ஐந்து வருடத்திற்கான அங்கீகாரத்தை பெற்று புனரமைக்கப் பட்ட அந்த சிறு பிராணிகள் கூடம், ரூபாய் 10 இலட்சம் செலவில் கட்டப்பட்டது. தற்போது பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**ரூ.112 கோடி மதிப்பீட்டில் Critical Care Block கட்டிடம் விரைவில் தொடக்கம்**

எதிர்வரும் ஆண்டுகளுக்கு இங்கே கூடுதல் வசதிகளாக ரூபாய் 112 கோடி மதிப்பீட்டில் critical Care Block ஒன்று கட்டப்பட இருக்கிறது. தரைத்தளம் மற்றும் ஆறு தளங்களுடன் கூடிய அந்த கட்டிடம் மிக விரைவில் கட்டப்பட இருக்கிறது. அதற்கான அரசாணை விரைவில் வெளியிடப் பட இருக்கிறது. விரைவில் அந்தப் பணிகள் தொடங்கப்படவிருக்கிறது. தரைத் தளம் மற்றும் 6 படுக்கைகளுடன் கூடிய கட்டிடத்தில் 300 படுக்கை வசதிகள் கொண்ட கூடுதல் வசதி ஸ்டான்லி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஏற்படுத்தப்படவிருக்கிறது.

அதேபோல் இங்கு செவிலியர் பயிற்சி பள்ளி இருக்கின்றது. செவிலியர் பயிற்சி பள்ளியில் படிக்கின்ற மாணவிகள் தங்கி பயில்வதற்கு உரிய கட்டிடம் என்கின்ற கோரிக்கை நீண்ட நாட்களாக விடுக்கப்பட்டது. 400 மாணவியர்களுக்கு தங்கும் வசதியுடன் கூடிய கட்டிடம் ரூ.7 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவிருக்கிறது. அக்கட்டிடத்திற்கும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். மிக விரைவில் அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, டெண்டர் கோரப்பட்டு விரைவில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மருத்துவத்துறையில் 1020 மருத்துவ பணியிடங்களுக்கு மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்ய இருந்த சூழ்நிலையில் ஒரு சில மருத்துவ மாணவர்கள் தமிழ்வழியில் பயின்றவர்களுக்கு முன்னுரிமை தரக்கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தனர். மேலும் இத்தேர்வில் சுமார் 85% பேர் தேர்ச்சி பெற்றிருந்தனர். அவர்களுக்கு பணி நியமனம் ஆணை தருவதற்குள் 14 மருத்துவர்கள் மீண்டும் நீதிமன்றத்திற்கு சென்று விட்டார்கள். நீதிமன்றத்தில் கோவிட் காலங்களில் பணியாற்றிய மருத்துவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்று கூறி நீதிமன்றத்திற்கு சென்றிருக்கிறார்கள்.

ஏற்கெனவே தமிழ்நாடு அரசினை பொறுத்தவரை, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் செய்யாத அளவில் கோவிட் காலங்களில் பணியாற்றிய மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள் போன்ற பல்வேறு மருத்துவ பணியாளர்களுக்கும் District Health Society மூலமாக எடுக்கப்பட்ட வேலை வாய்ப்புகளில் 20 மதிப்பெண்கள் கூடுதலாக வழங்கி அவர்களை பணியில் அமர்த்தியிருக்கிறோம். ஏறத்தாழ 4000க்கும் மேற்பட்ட பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் 14 மருத்துவர்கள் MRB தேர்விலும் கோவிட் காலங்களில் பணியாற்றியதற்கு முன்னுரிமை தரவேண்டும் என்று நீதிமன்றத்திற்கு சென்றிருந்தார்கள். நீதிமன்றம் இத்துறைக்கு எந்த விதமான அறிவுரைகளும் தராத நிலையில் துறையின் சார்பில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, கோவிட் காலங்களில் 2 ஆண்டுகளுக்கு தொடர்ச்சியாக பணியாற்றியவர்களுக்கு 5 மதிப்பெண்களை தரலாம் என்று முடிவெடுத்து, அரசாணை வெளியிட்டோம். அந்த அரசாணை வெளியிடப்பட்ட அடுத்த நாள் பத்திரிக்கைகளில் மருத்துவர்களின் அறிக்கை, அந்த அறிக்கை என்னவென்றால் இரண்டு ஆண்டுகள் பணியாற்றிய மருத்துவர்களுக்கு 5 மதிப்பெண்கள் என்றால் 6 மாதம், 7 மாதம் பணியாற்றிய மருத்துவர்கள் இருக்கின்றோம், ஆகையால் எங்களுக்கும் இந்த மதிப்பெண்கள் பிரித்து தந்தால் நன்றாக இருக்கும் என்று ஒரு அறிக்கை விடுத்திருந்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பொறுத்தவரை, ஒருவர் பாதித்தால் கூட பாதிப்பு பாதிப்புதான் என்று நினைத்து அவர்களின் கோரிக்கையினை நிறைவேற்றுங்கள் என்று இத்துறைக்கு உத்தரவிட்டார்கள்.

இந்த நிலையில் அவர்கள் பணியாற்றிய காலங்களுக்கான மதிப்பெண்களை பிரித்து அரசாணை வெளியிடப்பட்டது. கோவிட் காலங்களில் பணியாற்றிய மருத்துவர்கள் அவர்கள் பணிபுரிந்த மருத்துவமனைகளில் கோவிட் காலங்களில் பணியாற்றிய சான்றிதழ்களை சமர்ப்பித்து அதற்குரிய மதிப்பெண்களை பெற்றுக் கொள்ளலாம். அப்பணிகள் முடிந்தவுடன் 1021 மருத்துவர்கள் பணியிடங்கள் நிரப்பப்படும்.

இதற்கிடையில் 1000 மருத்துவர்களுக்கான காலிப்பணியிடங்கள் காலியாக இருக்கின்றது. இதையும் MRB மூலமாக விரைவில் நிரப்பப்படும். இதற்கிடையில் MRBயில் 983 மருந்தாளுநர்களுக்கான தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் 43,000 பேர் தேர்வு எழுதியிருக்கிறார்கள். மேலும் 1066 சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கும் தேர்வு முறை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிகபட்சமாக இன்னும் ஒருசில மாதங்களில் 3000க்கும் மேற்பட்ட மருத்துவப்பணியாளர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணி ஆணையினை வழங்குவார்கள்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.ப்ரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் டாக்டர் சாந்திமலர், பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழுத் தலைவர் இளைய அருணா, அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர். பாலாஜி, மருத்துவத்துறை பேராசிரியர்கள், செவிலியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (29.08.2023) சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மன இறுக்க நோய் (ஆட்டிஸம்) பாதித்த குழந்தைகள் பயன்பாட்டிற்கான உணர்திறன் மற்றும் செயல்திறன் மேம்பாட்டு பூங்கா திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.ப்ரியா, நாடாளுமன்ற உறுப்பினர் மரு.கலாநிதி வீராசாமி, ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சாந்திமலர், பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழுத் தலைவர் இளைய அருணா, அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.பாலாஜி, மருத்துவத்துறை பேராசிரியர்கள், செவிலியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## உழைப்பை மந்திரமாக ஏற்றுக் கொண்டு ஆட்சிக்கு வந்த முதல்வர்!

# இந்தியாவின் 2வது பொருளாதார மாநிலமாக உயர்ந்த தமிழ்நாடு!

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஆக. 31-

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக உழைப்பதை மந்திரமாக ஏற்றுக்கொண்ட முதலமைச்சர் 27 மாதங்களில் இந்தியாவின் 2 வது பொருளாதார மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கியுள்ளார் என்று ‘இரண்டாண்டில் 2 ம் இடம்’ என்ற தலைப்பில் ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.

அது வருமாறு:=

மாநிலங்கள், ஒரு தேசிய தலைநகரப் பகுதி உட்பட 8 யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கியது இந்தியா. 140 கோடி மக்கள் தொகையைக் கொண்ட இந்தியாவில் தமிழ்நாடு 2வது பெரிய பொருளாதார மாநிலமாக உருவெடுத்துள்ளது.

24 மணி நேரமும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக உழைப்பதை மந்திரமாக ஏற்றுக் கொண்டு 2021ல் ஆட்சியை பிடித்தார் மு.க. ஸ்டாலின். அவர் முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்ட 27 மாதங்களில் தமிழ்நாட்டை உண்மையாகவே தலை நிமிர வைத்துள்ளார். நாட்டின் 2வது பெரிய பொருளாதார மாநிலம் என்ற இலக்கை தமிழ்நாடு எட்டியிருக்கிறது என்றால் அதற்கு காரணம் முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசின் அசராத உழைப்பேயாகும்.

ஏழை, எளிய மக்களின் நலன் கருதி அரசு பேருந்துகளில் மகளிர்களுக்கு இலவச பயணம், அனைத்து அரசுப் பள்ளிகளிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு திட்டம், நான் முதல்வன், இன்னுயிர் காப்போம், கல்லூரி கனவு, புதுமைப் பெண் திட்டம் என தனது தந்தையும், முன்னாள் முதல்வருமான கலைஞர் பாணியில் கடந்த இரண்டரை கால ஆட்சியில் புதுப்புது திட்டங்களை செயல்படுத்தியுள்ளார் மு.க. ஸ்டாலின். ஒவ்வொரு நாட்டிற்கும், மாநிலத்திற்கும் ஜிடிபி என்ற மொத்த உள்நாட்டு உற்பத்தி தான் அடிப்படை. அதை வைத்து தான் ‘பெர் கேபிட்டா’ எனப்படும் தனி நபர் வருமானம் கணக்கிடப்படுகிறது.

இன்றைய நிலையில் தமிழ்நாட்டின் உற்பத்தி மதிப்பு ரூ.23 லட்சத்து 64 ஆயிரத்து 514 கோடியாக உயர்ந்திருக்கிறது. இதன் மூலம் நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 8.7 சதவீதமாக இருக்கிறது. கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் தனி நபர் வருமானம் ரூ.1 லட்சத்து 54 ஆயிரத்து 557 ஆகும். ஆனால் இந்த ஆண்டு தனி நபர் வருமானம் ரூ.ஒரு லட்சத்து 66 ஆயிரத்து 727 ஆக உயர்ந்திருக்கிறது. அதே நேரத்தில் இந்திய நாட்டின் தனி நபர் வருமானம் நடப்பு



தினகரன்

ஆகஸ்ட் 29, 2023 செவ்வாய்க்கிழமை

இரண்டாண்டில் 2ம் இடம்

28 மாநிலங்கள், ஒரு தேசிய தலைநகரப் பகுதி உட்பட 8 யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கியது இந்தியா. 140 கோடி மக்கள் தொகையைக் கொண்ட இந்தியாவில் தமிழ்நாடு 2வது பெரிய பொருளாதார மாநிலமாக உருவெடுத்துள்ளது.

24 மணி நேரமும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக உழைப்பதை மந்திரமாக ஏற்றுக் கொண்டு 2021ல் ஆட்சியை பிடித்தார் மு.க.ஸ்டாலின். அவர் முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்ட 27 மாதங்களில் தமிழ்நாட்டை உண்மையாகவே தலை நிமிர வைத்துள்ளார். நாட்டின் 2வது பெரிய

ஆண்டில் லட்சத்திற்கு கீழ் தான். அதாவது 98 ஆயிரத்து 374 ஆகும். கோவிட் தொற்று காரணமாக உலகமே பொருளாதார சரிவை சந்தித்தது. இந்த பொருளாதார சரிவில் இருந்து இன்னும் பல நாடுகள் மீளவில்லை.

குட்டி நாடான இலங்கையில் கூட பொருளாதார வீழ்ச்சி ஆட்சியாளர்களை புரட்டிப் போட்டது. ஆனால், 2021ல் கோவிட் தொற்று நேரத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அந்த தொற்றில் இருந்து மாநில மக்களை காப்பதை முதல் கடமையாக எடுத்துக் கொண்டார். ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே தனது அமைச்சரவை சகாக்களை மாவட்டங்களுக்கு முடுக்கி விட்டு கோவிட் தொற்றை முழுமையாக கட்டுக்குள் கொண்டு வந்தார். அடுத்து தொழில் தொடங்க உகந்த மாநிலம் தமிழ்நாடு என்பதை நிரூபிக்கும் வகையில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி தொழில் நிறுவனங்களின் கவனத்தை ஈர்த்தார். தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம், மின்னணு ஏற்றுமதியில் முன்னணி மாநிலம் என பொருளாதாரத்தை மீட்டெடுத்து நாட்டிலேயே 2வது மாநிலம் என்ற பெயர் பெறும் அளவிற்கு தலை நிமிரச் செய்திருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் என்றால் அது மிகையில்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்தியாவை மீட்டெடுக்க வேண்டிய போர்க்களம்!

என் இனிய தமிழ் சொந்தங்களே!

அண்டிப் பிழைப்பவன் அதிகாரத்துக்கு வந்து விட்டால் நொண்டி குதிரை கூட பந்தயத்தில் ஜெயித்து விடும்! இந்திய ஜனநாயக கோட்டையிலே ஓட்டைகளை உருவாக்கி அதன் வழியாக ஆரிய வாரிசுகள் பலர் அரியணை ஏறியதும் அதன் பலனாக பண மேடுகள் பண மலைகளாக ஏற்றம் பெற்றதும் மதவாதிகள் குறுநில மன்னர்களாக மாறி ஆங்காங்கே குழப்பங்களை விளைவித்ததும் சோசியலிச இந்தியாவை கார்ப்பரேட்டுகளின் இந்தியாவாக மாற்றியதும் புதுப்புது சட்டங்கள் மூலம் விவசாயிகளை, மாணவர்களை, தொழிலாளர்களை, இஸ்லாமியரை, கிறிஸ்தவரை, மத நம்பிக்கையற்றவர்களை, பட்டியலினத்தவரை, பாமரரை, படித்தவரை, வேலையற்றோரை, விவரம் புரியாத வரை, அடிமைப்படுத்தி ஏக இந்தியா என்ற பெயரில் சன்மார்க்க அரசியல்வாதிகளின் ஏதேச்சதிகாரத்தின் அதிகார எல்லைக்குள் அடக்கி வைத்த ஆன்மீக ஆசான்களின் முழு ஆசைகளும் நிறைவேறாத காரணத்தினால் 2024 இல் தேர்தல் களம் கண்டு மீண்டும் பதவியை அடைய முயற்சியில் இறங்கிவிட்டனர்!

இந்த முடி மன்னர்களின் அடிமைத் தளையினை அறுத்து விடுதலை முரசொலித்து இந்திய குடிமக்கள் ஒவ்வொருவரும் சுதந்திரக் காற்றை மீண்டும் சுவாசிக்க வேண்டுமானால் தெற்கே பிரகாசிக்கும் உதயசூரியன் ஒளியிலே இந்திய அணி முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின் சொல்லும் திராவிட அரசியல் என்ற பிரமாஸ்த்திரத்தை கையில் எடுத்து 2024 இல் நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் வீர நடை போட வேண்டும்!

அடுத்து வரப்போவது வெறும் தேர்தல் களம் அல்ல! வெள்ளையனை விட விஷமத்தனம் நிரம்பிய கொடும் மதவெறி பிடித்த குலக்கல்வி திட்டத்தை ஆதரிக்கும் ஜனநாயகத்தை குலைக்கும் கார்ப்பரேட்டுகளின் கைக்கூலிகளாக இயங்கும் மாநில சுதந்திரங்களை பறிக்கும் இதயமே அற்ற இரக்கமே இல்லாத சன்மார்க்க அரசியல் என ஏமாற்றி தனிமனித சுதந்திரத்தை பறித்திட்ட பசுத்தோல் போர்த்திய சைவப் புலிகளிடமிருந்து பாரதத்தை மீட்டெடுக்க வேண்டிய சுதந்திரப் போர்க்களம்!

இங்கே துப்பாக்கிகளும் வான் படைகளும்...பிறபல ஆயுதங்களும் தேவையே இல்லை.பயனற்ற வார்த்தைகளும் தேவையில்லை!

இந்திய மக்கள் கடந்த 10 ஆண்டுகள் பட்ட துன்பங்களையும் துயரங்களையும் பதாதைகைகளாக எழுதி ஒவ்வொரு வீட்டு வாசலிலும் வையுங்கள்!

தெருமுனைகளில் ZERO BALANCE வங்கி கணக்குகளால் ஏழைகள் ஏமாந்த கதையை எழுதி வையுங்கள்!

நகரெங்கும் நீட் தேர்வினால் தூக்கு மாட்டிக்கொண்ட மாணவ, மாணவியரின் படங்களை ஒட்டுங்கள்.

பிரதமர் பெயரிலே ஆரம்பிக்கப்பட்ட ஏழைகளுக்கான வீடு கட்டும் திட்டம்...சேமிப்பு திட்டம் வேலை வழங்கும் திட்டம் 15 லட்சங்கள் போடும் திட்டம் அனைத்தும் அடைந்த படுதோல்விகளை பட்டியலிட்டு போஸ்டர்களை ஒட்டுங்கள்!

ஏழை என் வீட்டிலே உணவில்லை. பிறந்த குழந்தைக்கு பாலூட்ட தாயின் மார்பிலே பால் சுரக்கவில்லை. இந்த நிலையிலே பல ஆயிரம் கோடிகளில் புதிய பாராளுமன்ற கட்டிடம்....அதிலே ஒரு செங்கோல் - இவை தேவைதானா என கேளுங்கள்!

காஷ்மீர் நமது கைக்குள்ளே எனச் சொல்லுகின்ற அவர்களிடம் சீனாவிடம் பறிகொடுத்த பாரதத் தாயின் நிலப்பரப்பின் அளவு எவ்வளவு? அது ஏன் மீட்கப்படவில்லை என்று கேளுங்கள்!

பிரதமரின் பத்தாண்டு பயணச் செலவுகள் - நவீன ஆடைகளின் செலவு எவ்வளவு என்று விசாரியுங்கள்!

அவர்கள் மாநிலங்களுக்கு அனுப்பிய கவர்னர்களின் வரம்பு மீறிய செயல்களால் தடைப்பட்ட மாநில அரசுகளின் நற்செயல்களை பட்டியலிட்டு மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்!

இன்னும் சொல்லுவதற்கு ஏராளம் உண்டு!

தேசபிதா அண்ணல் காந்திஜி காண விரும்பிய இந்தியாவை 10 ஆண்டுகளாக நேர் எதிர் திசையில் நாட்டை நடத்திச் சென்று நாசக்குழிக்குள் தள்ளிவிட்ட இவர்களை உங்கள் வாக்குகள் என்ற பொன்னான ஜனநாயக ஆயுதம் கொண்டு விரட்டி அடியுங்கள்.

நீங்கள் போடுகின்ற ஓட்டிலே இனிமேல் இவர்கள் டெல்லி பக்கமே தலைவைத்து படுக்கக் கூடாது என்ற நிலை ஏற்பட வேண்டும்! முடிந்தால் இவர்களை இமயத்தின் எல்லை பக்கமாக விரட்டிய அடியுங்கள்!

இந்த மடாதிபதிகளுக்கு அந்த இடம் தான் ஏற்ற இடம் என்பதால் இவர்களை விரட்டுங்கள் உங்கள் ஒருவிரல் புரட்சி மூலம்!

வளர்க திராவிட அரசியல்! வெல்க இந்திய சுதந்திரம்!



**வி.செ.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்





தமிழினத்தலைவர் – முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூந்தமல்லி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் செம்பரம்பாக்கம் ஊராட்சியில் கபடி போட்டி ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் இறுதிப்போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பை மற்றும் பரிசு வழங்கினார். அருகில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, நகரச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை, பொதுக்குழு உறுப்பினர் வி.குமார், ஒன்றிய நிர்வாகிகள் ஏ.ஜனார்த்தனன், எம்.இளையான், ஏ.ஆர்.பாஸ்கர், எஸ்.புகழேந்தி, ஆர்.பிரபாகரன், வி.பி.பிரகாஷ், ஒன்றிய கவுன்சிலர் பிரியாசெல்வம், கிளை கழக செயலாளர்கள் எம்.சங்கரன், விநாயகம், டி.ராஜாமணி, சி.எம்.ஸ்ரீதர், ஜி.குமார், நா.கேசவன், எம்.கே.பாஸ்கர், முரளி தரன், கே.பி.ஞானமூர்த்தி, எஸ்.மனோஜ்குமார், பரிமளழகன் உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## குரு - சிஷ்யன்



**சிஷ்யன்:** குருவே, 2014ல் 410/- ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட சமையல் எரிவாயு, கடந்த 9 ஆண்டுகளில் 3 மடங்காக விலை அதிகரித்து ரூ.1,118.50/- ஆக உயர்ந்தது.

தற்போது ரூ.200/- குறைத்துள்ளதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளதே, குருவே?

**குரு :** **சிஷ்யா, விஸ்வரூபம் எடுத்துள்ள ஊழலை மறைக்க, மக்களை திசைதிருப்ப, 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஒரு வெள்ளோட்டம்.**

**பல ஆண்டுகளாக ஆயிரக்கணக்கில் விலை கொடுத்து வாங்கி வந்தவர்கள், பா.ஜ.க.வினால் பாதிக்கப்பட்ட மக்கள் அவ்வளவு எளிதில் மறக்கமாட்டார்கள்.**

திருமதி. பி. விஜயலட்சுமி

# கழகத் தலைவராக தளபதியார்... அடி முடி காண முடியாத பிரம்மாண்டம்..!

தலைவர் தளபதியார் அவர்கள் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்று இன்றோடு மிகச் சரியாக ஐந்து ஆண்டுகள் நிறைவு பெற்று ஆறாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கின்றார்..!

ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட ஓர் பேரினத்தின் விடிவெள்ளியாய் முளைத்து... அந்த இனத்திற்கு விடியலைத் தந்து, அவ்வினத்தின் பிள்ளைகளை இந்த பூமிப்பந்திலிருந்து நிலவுத்தரை வரையிலும் உயரத்திற்கு கொண்டு சென்றதில் முழுமையாக சாதித்துக் காட்டிய பெருமிதத்தோடு...

இதோ அடுத்த மாதம் தனது பவள விழா கொண்டாட்டங்களை துவக்கவிருக்கின்ற, பேரியக்கத்தின் தலைமைப் பொறுப்பு என்பது அவ்வளவு எளிதானது அல்ல..!

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பினை தன் தோள்களில் சுமந்து கடந்த ஐந்து ஆண்டுகளில்... ஐம்பது ஆண்டுகள் புடம்போடப் பட்டு அமர வைக்கப்பட்ட தலைவர் தளபதியார் தனது பொறுப்பை எந்த அளவிற்கு திறம்பட கையாண்டிருக்கின்றார் என்பதன் ஒரு ஸ்கேன் ரிப்போர்ட் தான் இது..!

இந்த அறிக்கை என்பது... அவர் தலைவராகப் பொறுப்பேற்றதிலிருந்து கழகத்திற்கு அவர் ஈட்டித் தந்த நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி, உள்ளாட்சி தேர்தல் வெற்றிகள், சட்டமன்ற தேர்தல் வெற்றிகள்... அதனைத் தொடர்ந்து கழகத்தை ஆட்சிக்கட்டிலில் அமர்த்தி, அதன் தலைவராக... அதாவது ஆட்சித் தலைவர் எனும் முதலமைச்சர் பொறுப்பில் அவர் தமிழ்நாட்டிற்கும், தமிழக மக்களுக்கும் ஆற்றியிருக்கின்ற பணிகள், செயல்படுத்தியிருக்கின்ற திட்டங்கள், ஏற்படுத்தியிருக்கின்ற முன்னேற்றங்களைப் பற்றியெல்லாம், புள்ளிவிவரங்களோடு எடுத்துச் சொல்லுகின்ற பதிவாக இது இருக்காது..!

மாறாக, கழகத்தலைவராக அவர் கழகத்திற்கு ஆற்றியிருக்கக் கூடிய... யாருமே எதிர்ப்பார்க்க இயலாத... யாருமே நம்ப இயலாத... யாராலும் மறுக்க இயலாத சாதனைகளை... இன்னும் சொல்லப்போனால் ஒரே ஒரு முக்கிய சாதனையைப் பற்றித்தான் இங்கே விலாவாரியாக அலசி ஆராயப் போகின்றோம்...!

பேரறிஞர் அண்ணா இந்த இயக்கத்தை 1949 இல் துவங்கிய பொழுது, இந்திய ஒன்றியம் என்பது ஒரு நாடாக... அதாவது குடியரசாக ஆகியிருக்கவில்லை.

இந்தியா குடியரசான பிறகு தேர்தல்கள் வரும்... அதில் பங்கேற்று ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றினால் தான், நம் இனத்திற்குத் தேவையானவைகளை நாமே சட்டமியற்றி, அடிமை விலங்குகளை உடைத்தெறிந்து உண்மையான விடுதலையை அடையமுடியும் என்ற நம்பிக்கையிலேயே தான் அவர் தி.மு.கழகத்தை... தி.க.விலிருந்து பிரிந்து வந்து துவக்குகின்றார்..!

அப்படி துவங்கிவிட்டு அடுத்து வந்த 1952 தேர்தல்களில் அவர் திமு கழகத்தை பங்கெடுக்க வைத்தாரா என்றால் அது தான் இல்லை..!

ஆம்... தேர்தல்களில் தம் இயக்க தம்பிமார்களை, தொண்டர்களை ஈடுபடுத்தும் முன்பாக இயக்கத்தை தமிழ்நாடு முழுவதும், பட்டி தொட்டி வரையிலும்... அமைப்புக்கள் வாயிலாக கட்டமைக்க வேண்டும் என்று முடிவெடுத்து களத்தில் இறங்கினார்..!

அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அவர் கால்கள் தமிழ்நாடு முழுவதும் பயணித்தன... மாநில அமைப்பைத் துவங்கிய நிலையில்.... அடுத்ததாக மாவட்ட அமைப்புக்கள்... நகர, ஒன்றிய, பேரூர்களில் கழக அமைப்புக்களை உருவாக்குதல்... அதனைத் தொடர்ந்து ஊராட்சிகளில் அமைப்புகளை உருவாக்கி முடியும் வரையிலும் அவரது அந்த பயணம் நிற்கவேயில்லை..!

கிட்டத்தட்ட ஆயிரம் நாட்கள் இந்த அதி முக்கிய பணிக்காகவே பேரறிஞர் அண்ணா முழுமையாக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார் என்றால் மிகையில்லை.

**ஒவ்வொரு மாவட்ட அமைப்புகளும் உருவாக்கப்பட்டு அதற்கு கீழே நகர, ஒன்றிய, ஊராட்சி அமைப்புகள் வரையிலும் அவர் ஒவ்வொரு நாளும் அவற்றுக்கான தலைவர், செயலாளர், பொருளாளர், பிரதிநிதிகள், துணைச் செயலாளர்கள் என்று நியமனம் செய்து அறிவிக்க அறிவிக்க...**

**ஒரு முழுமையான பேரியக்கம் மெல்ல மெல்ல உருப்பெறத் துவங்கியது... தாங்கள் தான், தாங்கள் மட்டுமே தான் என்று இறுமாப்புடன் இருந்து கொண்டிருந்த அன்றைய காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட்டுகள் எல்லாம் மெல்ல மெல்ல... தி.மு.கழகத்தை திரும்பிப்பார்க்கத் துவங்கினர்..!**

ஒவ்வொரு அமைப்பையும் உருவாக்க உருவாக்க... அண்ணாவும் அவர் தம்பிமார்களும் அங்கே பொதுக்கூட்டங்கள் நடத்துவது, அரசியல் விழிப்புணர்வு சமூகநீதி நாடகங்கள் நடத்துவது, பாசறைகள் அமைப்பது, படிப்பகங்கள் அமைப்பது... என்று தமிழ்நாடு முழுவதும் மக்களை அரசியல்மயப்படுத்தினார்கள்..!

பேரறிஞர் அண்ணாவின் சாதனைகளிலேயே மிக மிக முக்கியமான சாதனை என்றால் இது தான்..! (கழகத்தைப் பொறுத்தவரை)

கழகத்தின் அமைப்புகள் முழுவதுமாக கட்டமைக்கப்பட்டு, அதன் தொண்டர்கள் அரசியல் விழிப்புணர்வை அடைந்த நிலையில் தான் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாட்டினை 1956இல் திருச்சியில் கூட்டி... கழக தொண்டர்களிடமே நாம் தேர்தலில் பங்கேற்கலாமா என்ற கேள்வியை கேட்டு... அதற்கு ஒரு தேர்தலும் அங்கேயே வைத்து... தொண்டர்களின் ஏகோபித்த ஆதரவோடு அடுத்த ஆண்டு... அதாவது 1957 இல் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் முதன் முறையாக தி.மு.க. பங்கேற்றது..!

இது என்ன அவ்வளவு பெரிய்ய்ய சாதனையா என்று யாராவது கேட்பீர்களேயானால்...

ஆம்... விடுதலை பெற்று குடியரசான இந்திய ஒன்றிய வரலாற்றிலேயே காங்கிரஸ் அல்லா ஒரு மாநிலக் கட்சி, காங்கிரஸை வீழ்த்திவிட்டு முதன் முதலாக ஒரு மாநிலத்தில் ஆட்சியை கைப்பற்றியது என்றால் அது திராவிட முன்னேற்ற கழகம் மட்டுமே. அந்த சாதனையை நிகழ்த்திக் காட்டியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் மட்டுமே. அவர் அந்த சாதனையை செய்வதற்கு முக்கிய காரணமாக அமைந்தது, தமிழ்நாடு முழுவதும் தன் இயக்கத்திற்கு கடைகோடி வரையிலும் கட்டமைப்பை உருவாக்கி, மக்களை அரசியல்மயப்படுத்தியது தான்..!

முதன் முதலாக இந்திய ஒன்றியத்தில் ஆட்சியமைத்த மாநிலக்கட்சி என்ற சாதனை மட்டுமல்ல... அதன் பிறகு அவர் உருவாக்கிய இயக்கமோ அல்லது அவர் பெயரில், அவரது கொள்கையை மட்டுமே கடைபிடிப்பதாக சொல்லி உருவாக்கப்பட்ட இயக்கமோ மட்டும் தான் 56 ஆண்டுகளைக் கடந்தும் இன்று வரையிலும் தமிழ்நாட்டில் ஆட்சி செய்ய முடிகின்றது என்ற சாதனைக்கும்... அவர் அமைத்துக் கொடுத்த உட்கட்டமைப்பும் தமிழர்களை அரசியல் விழிப்பு ணர்வுள்ளவர்களாக மாற்றியதும் தான் காரணமாக அமைந்தது..!

சரி; அவர் உருவாக்கிய இயக்கத்திற்கு அண்ணா உட்கட்டமைப்பை உருவாக்கித் தந்தார்... அதனால் அக்கட்சி முதன் முதலாக ஆட்சியைப் பிடித்தது, இன்று அவ்வியக்கம் பவளவிழா கொண்டாடும் தருணத்திலும் ஆட்சியில் இருக்கின்றது.... இதை புரிந்துகொள்ள முடிகிறது...

ஆனால் அவர் பெயரில் துவங்கப்பட்ட ஒரு இயக்கம் எப்படி தமிழ்நாட்டில் ஆட்சியை பிடிக்க முடிந்தது..?! அக்கட்சிக்கான உட்கட்டமைப்பை உருவாக்கியவர் யார்..?! என்று நீங்கள் கேட்க வருகின்ற சந்தேகம் நன்றாக புரிகிறது...!

அந்த இன்னுமொரு கட்சியை துவங்கியவர் நடிகர் எம்ஜிராமச்சந்திரன். பேரறிஞர் அண்ணா உட்கட்டமைப்பை உருவாக்கி விட்டு, அடுத்த தேர்தலில் போட்டியிடலாம் என்ற தொண்டர்களின் ஆதரவையும் பெற்றுவிட்டு சும்மா உட்கார்ந்துவிடவில்லை.

அன்றைக்கு (அச்சு)ஊடகங்கள் எல்லாம் அவள் கைப்பிடியில், காங்கிரஸ் ஆதரவு நிலைப்பாட்டிலேயே இருந்த நிலையில், தங்கள் இயக்கத்தின் கொள்கைகளையும், ஆளுங்கட்சியின் அவலங்களையும் மக்களிடம் கொண்டு செல்ல அண்ணாவின் கைவசம் இருந்த ஒரே ஊடகம் என்றால் அது மேடை நாடகங்களும், திரைத்துறையும் மட்டும் தான்..!

அந்த இரண்டு துறைகளில் இருந்தும் மக்களிடம் நன்கு அறிமுகமான நடிகர்களை தங்கள் பிராண்ட் அம்பாஸிடராக கொண்டுவர அண்ணா விரும்பிய நிலையில்...

பல்வேறு திரை ஆளுமைகள் தி.மு. கழகத்திற்கு ஆதரவாக களத்தில் இறங்கினர். அப்படி தலைவர் கலைஞர் அவர்களால் தி.மு. கழகத்திற்குள் கொண்டுவரப்பட்டவர் தான் நடிகர் எம்.ஜி. ராமச்சந்திரன்.

இவர் வந்த காரணத்தினால், அதுவரையிலும் திமுக ஆதரவாளராக இருந்து திரைத்துறையில் எம்.ஜி. ஆரின் போட்டி நடிகராக விளங்கிய நடிகர் சிவாஜி கணேசன் அவர்கள், மெல்ல காங்கிரஸ் பக்கமாக கரை ஒதுங்கிவிடுகின்றார்..!

எம்.ஜி.ஆர். படங்களுக்கு தொடர்ந்து திராவிட இயக்க அரசியல் சாயம் கலந்து கலைஞர் எழுதிய வசனங்கள், அவரை தமிழ்நாட்டின் பட்டிதொட்டியெங்கும் ஒரு புரட்சி நடிகராக வலம்வர வைத்தது..!

இந்த நிலையில் தான் அவர் தன்னை பலப்படுத்திக் கொள்ள, தி.மு.க.வின் அமைப்புக்கள் எங்கெங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் தனது ரசிகர் மன்றங்களை படிப்படியாக துவங்குகின்றார். கிட்டத்தட்ட 18 ஆண்டுகாலம் அவர் இதை கொஞ்சம் கொஞ்சமாக செய்து... தி.மு.க. தொண்டர்களின் வீட்டு பிள்ளைகள் எல்லாம், எம்.ஜி.ஆரின் ரசிகராக அவரது ரசிகர் மன்றத்தில் இணைகின்றனர்..!



**சௌமியன் வைத்தியநாதன்**
**திராவிட இயக்க எழுத்தாளர்**

ஒரு கட்டத்தில் 1972இல் எம்.ஜி.ஆர். தி.மு. கழகத்திலிருந்து வெளியேறிய பிறகு... தன் ரசிகர் மன்றங்கள் அனைத்தையும் அப்படியே அவர் துவங்கிய கட்சியின் அமைப்புகளாக மாற்றி விடுகின்றார். அதனால் கிட்டத்தட்ட தி.மு.க.வுக்கு இணையான கட்டமைப்பு அவர் கட்சிக்கும் உடனடியாக அமைந்த காரணத்தினால் தான் அவர் கட்சியும் ஆட்சிக்கு வர முடிந்தது.

இந்த முழுமையான உட்கட்டமைப்பு இல்லாத எந்தக் கட்சியாலும் தமிழ்நாட்டில் ஆட்சியமைக்கவே முடியாது. இது தான் உண்மை. அதனால் தான் எம். ஜி. ஆருக்குப் பிறகு அவர் அளவிற்கோ அல்லது அவரை விட பிரபல மானவராகவோ திகழ்ந்த நடிகர்களான சிவாஜி கணேசன், டி.ராஜேந்தர், பாக்கியராஜ், விஜயகாந்த், கமலஹாசன், ரஜினிகாந்த் உள்ளிட்ட எவருமோ...

அல்லது சினிமா சாராமல், சில பல அரசியல் தலைவர்களால் உருவாக்கப்பட்ட ம.தி.மு.க, பா.ம.க, த.மா.கா., நாதக உள்ளிட்ட எந்தவொரு இயக்கமும் ஆட்சியைப் பிடிக்கும் எல்லைக் கோட்டிற்கு அருகில் கூட வர இயலாமல் போனது..!

நிற்க... அதன் பிறகு நடந்தவைகளை நாம் நன்கறிவோம்..!

**அனைவருமே ஒரு கட்சியை ஆரம்பிப்பார்கள்... அடுத்த ஓரிரு ஆண்டுகளிலேயே தேர்தலில் போட்டியிடுவார்கள்... அதற்குள்ளாக ஊடக வெளிச்சம் அவர்கள் மீது பலமாக பாயும்... பேசுபொருளாவார்கள்... இத்தோடு தி.மு.க. அழிந்தது என்று பரப்புரை செய்யப்படும்... ஆனால் தேர்தலில் மண்ணைக் கவ்விவிடுவார்கள். ஒரு சிலர் ஓரிரு தேர்தல்கள் தாக்குப்பிடித்து... பிறகு ஏதாவது ஒரு கூட்டணியில் பங்கேற்று ஓரிரு எம். எல். ஏக்களுடன் கரை ஒதுங்கிவிடுவார்கள்..!**

**இப்படியான நிலையில் தான் அரை நூற்றாண்டு அசைக்கமுடியாத தலைவராக விளங்கிய தலைவர் கலைஞரின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்கின்றார் தளபதியார் மு.க. ஸ்டாலின் அவர்கள்..!**

அதே சமகாலத்தில் தான் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வரும் தகுதியோடு உட்கட்டமைப்பைக் கொண்டிருக்கும் இன்னுமொரு கட்சியான அ.தி.மு.க... ஓ.பி.எஸ், ஈ.பி.எஸ். என்ற இரட்டைத் தலைமையோடு ஆட்சியில் இருக்கின்றது..!

மு.க. ஸ்டாலின் அவர்கள் கழகத்தின் தலைவராக பொறுப்பேற்கும் பொழுது, கழகம் தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சியை இழந்திருந்திருந்து ஏழு ஆண்டுகளாக தொடர்ந்து ஆட்சியில் இல்லாமல் இருந்தது. நாடாளுமன்றத்தில் ஒரு மக்களவை உறுப்பினர் கூட கழகத்திற்கு கிடையாது.

இவை அனைத்திற்கும் மேலாக, அரை நூற்றாண்டு கால ஆளுமை மிக்க தலைவரான கலைஞரின் மறைவும் தொண்டர்களிடையே சோர்வையும், எதிரிகளிடம் இறுமாப்பையும், ஊடகங்கள் வாயிலாக பொது மக்களிடம் ஒருவித நம்பிக்கையற்ற தன்மையையும் உருவாக்கி விட்டிருந்தது..!

தமிழ்நாடு அரசியலில் தலைமைக்கு ஒரு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது என்று எதிரிகளால் ஊடகங்கள் வாயிலாக ஒரு பரப்புரை முன்னெடு க்கப்பட்டு... ரஜினிகாந்த், கமல்ஹாசன் போன்றோரெல்லாம் அரசியல் களத்தில் இறக்கப்பட்டனர்..!

இவை அனைத்தையும் தளபதியார் அவர்கள் புறம் தள்ளி விட்டு, தன் முன்னே ஒரே ஒரு குறிக்கோளை மட்டுமே முழுமையாக வைத்தார். அது தன் கழக தோழர்களை, கலைஞரின் உடன்பிறப்புகள் உற்சாகம் அடையச் செய்வது என்பதே..!

அதற்கு ஒரே வழி, அடுத்த எட்டு மாதத்தில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் கணிசமான வெற்றியை ஈட்ட வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்..!?

இதை வென்றெடுக்க அவர் தனித்தனியாக இரண்டு மார்க்கங்களில் பயணிக்கத் துவங்கினார். ஒரு பக்கம், தொண்டர்களை தொடர்ந்து சுறு சுறுப்புடனும், பர பரப்புடனும் வைத்துக் கொள்வது. அதற்காக, அகில இந்திய தலைவர்களை அழைத்து கலைஞர் சிலை திறப்பு விழா நடத்துவது.... முரசொலி பவள விழாவினை நடத்துவது....

மாவட்டங்கள் தோறும், கலைஞர் செயல்பட்ட அனைத்து துறைகளிலும் அல்லது அவர் சாதனை செய்த அனைத்து துறைகளின் சார்பாகவும் தமிழ்நாடு முழுவதும் அந்தந்த துறை வல்லுநர்களை அழைத்து தொண்டர்களை கூட்டி கருத்தரங்கம் நடத்துவது. சென்னையில் இருக்கும் அத்தனை நாளும், தன் இயக்க சகாக்களுடன் சென்று கலைஞர் ஓய்விடத்தில் அமர்ந்து ஆலோசிப்பது...

அங்கே பல்வேறு ஊர்களிலிருந்தும் வரும் கழக தொண்டர்களிடம் அளவளாவுவது... கலைஞர் ஓய்விடத்தை தினம் தினம் விதவிதமான மலர்களால் அலங்கரிப்பது... அதை ஊடகங்கள் வாயிலாக பேசுபொருளாக்குவது...

இப்படி தொடர்ந்து கழக தொண்டர்களை மட்டுமல்லாது, பொது மக்களையும், இளைஞர்களையும் கூட அவர் தி.மு.க. மயப்படுத்தினார். அப்பொழுது ஆளுங்கட்சியாக அ.தி.மு.க. இருந்தாலும், மக்கள் மன்றத்தில் பேசுபொருளாக தி.மு.க.வையே முன்னிலையில் வைத்திருந்தார்..!

இது ஒரு மார்க்க பயணம் என்றால்... இன்னொரு மார்க்கத்தில், அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக... கிட்டத்தட்ட ஒத்த கொள்கைகள் மற்றும் கருத்துகளை உடைய கட்சிகள் அனைத்தையும்... அதன் தலைவர்களிடம் ஒரு சாமான்யனாக... அந்தந்த சிறு கட்சிகளின் தலைவர்கள் இடத்திலிருந்து பார்க்கும் பார்வையாளனாக செயல்பட்டு... பேசி... அற்புதமான கூட்டணியை உருவாக்கினார்..!

அந்தக் கூட்டணி தான் அடுத்து வந்த நாடாளுமன்ற தேர்தலில் ஒரே ஒரு இடம் தவிர்த்து அனைத்து இடங்களையும் வாரிச்சுருட்டி... தமிழ்நாடு வரலாற்றிலேயே 53 சதவிகித வாக்குகளைப் பெற்று அசைக்க முடியாத வெற்றியையும்.... நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய்ய கட்சி என்ற அங்கீகாரத்தையும் தி.மு.கழகத்திற்கு பெற்றுத்தந்தது.... அதாவது தலைவர் தளபதியார் பெற்றுத்தந்தார்...!

அவரது முதல் இலக்கான... தொண்டர்களை உற்சாகம் கொள்ளச் செய்வது என்பது மிக மிக ஆர்ப்பாட்டமாக நடந்தேறியது..! அதன்பிறகு கழகத்தின் வெற்றி என்பது...

கிராமப்புற உள்ளாட்சித் தேர்தல் வெற்றி... சட்டமன்ற தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடித்தது... (கால் நூற்றாண்டுக்குப் பிறகு மூன்று இலக்கத்தில் தி.மு.க. உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்குள் நுழைந்தது)... நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் வெற்றிகள்... என்று தி.மு.க.வின் தேர்தல் வெற்றிகளை ஒரு தொடர்கதையாக்கி விட்டார்..!

இது ஒரு புறம் நடந்து கொண்டேயிருக்க... இன்னொரு பக்கம் அவர் செய்தது தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் செய்ததற்கு இணையான கழகத்திற்கு செய்த மாபெறும் சாதனை..!

ஆம்... அப்பொழுது சமீபத்தில் தான் அதற்கு



நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக கிட்டத்தட்ட 32 லிருந்து பிரிக்கப்பட்டு 65ஆக உயர்த்தப்பட்ட கழக மாவட்டங்களை மேலும் பிரித்து 72ஆக உயர்த்தினார்.

2014 வரையிலும் 385 ஒன்றிய கழகங்களாக இருந்தவற்றை கிட்டத்தட்ட 700 ஒன்றிய கழகங்களாக பிரித்திருந்த நிலையில்... தளபதியார் பொறுப்பேற்ற பிறகு அவற்றை மேலும் பிரித்து கிட்டத்தட்ட 1000 ஒன்றிய கழகங்களாக உயர்த்தினார்..!

18 ஆக இருந்த சார்பு அணிகளை மேலும் புதிய ஐந்து சார்பு அணிகளை உருவாக்கி 23 ஆக உயர்த்தினார்..! உயர்த்தியது மட்டுமல்லாமல்... இளைஞரணி, தொமுச உள்ளிட்ட ஒன்றிரண்டு சார்பு அணிகள் தவிர்த்து மற்ற அணிகளில் மாவட்ட அமைப்புக்கள் மட்டுமே இருந்த நிலையில்... பெரும்பான்மையான அணிகள் அனைத்திற்கும் ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, வட்ட கழகங்கள் வரையிலும் அமைப்புகளை உருவாக்கினார்..!

12500 ஊராட்சி கழக அமைப்புக்களாக இருந்ததை கிட்டத்தட்ட ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் நான்கு கிளைக்கழகங்களை புதிதாக உருவாக்கி... கிராமங்களின் கடை கோடிகளில் கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் புதிய அமைப்புகளை உருவாக்கி விட்டிருக்கின்றார்..!

இவை அனைத்திற்கும் உச்சக்கட்டமாக ஒரு சட்டமன்ற தொகுதியில் சராசரியாக 300 வாக்குச் சாவடிகள் இருந்தால் அதில் ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் தேர்தல் ஆணைத்திற்கு கழகம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டிய ஒரு வாக்குச்சாவடி முகவர் தவிர்த்து அவருக்கு கீழே பத்து பேர் கொண்ட ஒரு பூத் கமிட்டியை உருவாக்கியுள்ளார். அதில் குறைந்த பட்சம் ஒரு பெண் முகவரும் இருக்கின்றார்..!

ஒரு தொகுதியில் 300 பூத் இருந்தால்... அதில் திமுகவின் சார்பாக ஒரு பெண் உட்பட 11 பாக முகவர்கள் போடப்பட்டுள்ளது. அதாவது ஒரு தொகுதிக்கு இவர்கள் மட்டுமே மூவாயிரத்து முன்னூறு பேர் இருப்பார்கள்..!

அவர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் உள்ள ஒன்றிய, பேரூர், நகர கழகங்களில்... தலைமைக் கழகத்திலிருந்து சார்பு அணிகளின் மாநில துணைச் செயலாளர் ஒருவரை பொறுப்பாளராக நியமித்து மூன்று மாதங்கள் தங்கி... பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் அவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்ட பாக முகவர்களின் ஒட்டு மொத்த பயிற்சிப் பாசறை கூட்டத்தை கழக இளைஞரணிச் செயலாளர் நடத்தி முடித்துக் கொண்டு வருகின்றார். அதாவது ஒரு கழக மாவட்டத்தில் மூன்று சட்டமன்ற தொகுதிகள் இருந்தால், அதில் கிட்டத்தட்ட பத்தாயிரம் பேரை ஒன்றாகக் கூட்டி அவர் உரையாற்றுகின்றார்...!

இதில் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து கழக மாவட்டங்களையும் கிட்டத்தட்ட 15 மாவட்டங்களை உள்ளடக்கிய ஒரு மண்டலமாக பிரித்து... ஆக மொத்தம் ஐந்து மண்டலங்களாக பிரித்து... அந்தந்த மண்டலங்களில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில் உள்ள அதிகாரப்பூர்வமான பாக முகவரை மட்டும் அழைத்து...

அதாவது ஒரு மண்டலத்திற்கு சராசரியாக 15 ஆயிரம் பாகமுகவர்களை அழைத்து அவர்களுக்கு மட்டும் ஒரு முழுநாள் பயிற்சியை பல்வேறு கழக வல்லுநர்களைக் கொண்டு அளித்து இறுதியாக தலைவர் தளபதியார் அவர்களிடம் உரையாற்றுகின்றார். இதுவரையிலும் இரண்டு மண்டலங்களுக்கான பயிற்சிப்பாசறை முடிந்து விட்ட நிலையில் இன்னும் மூன்று மண்டலங்கள் மட்டுமே பாக்கியுள்ளது. அவையும் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் நிறைவு பெறும்..!

இதற்கு முன்பாக தளபதி அவர்கள் தலைவராக பொறுப்பேற்றதிலிருந்து மாவட்ட, ஒன்றிய, கிளை கழகங்கள் மற்றும் சார்பு அணிகளின் எண்ணிக்கைகளை அதிகப்படுத்தியதாக சொல்லியுள்ளேன் அல்லவா... அதனால் என்ன பலன் விளைந்துவிடப் போகிறது என்று அரசியல் பாலபாடத்தைக் கற்றுக்கொண்டிருக்கும் ஒரு தம்பி கேட்கலாம்...

தலைமைக் கழகம் தவிர்த்து மற்ற அமைப்புகள் அனைத்திலுமே அவைத்தலைவர், செயலாளர், துணைச் செயலாளர்கள், பொருளாளர், பிரதிநிதிகள் என்று சராசரியாக 15 நிர்வாகிகள் வரை இருப்பார்கள்.

இந்த இடத்தில் நீங்களே ஒரு கணக்கைத் தோராயமாக போட்டுக் கொள்ளுங்கள்... 72 மாவட்ட கழகம், 150 நகர கழகம், 529 பேரூர் கழகம், 21 மாநகர கழகம், ஆயிரம் ஒன்றிய கழகம், 12ஆயிரத்து ஐநூறு ஊராட்சி கழகம் அதற்கு கீழே கிட்டத்தட்ட 50ஆயிரம் கிளைக்கழகங்கள்... இதைத் தவிர்த்து நகராட்சிகளில் வார்டு கழகங்கள், மாநகராட்சிகளில் பகுதி கழகங்கள் மற்றும் வட்டக் கழகங்கள் என்று....

அத்தனையையும் 15 நிர்வாகிகளால் பெருக்கினால்... சற்றேறக்குறைய 10 லட்சம் நிர்வாகிகள் பேரண்ட் பாடி என்று சொல்லப்படும் தாய் கழகத்தில் மட்டும் இருக்கின்றார்கள்...!

இதைத் தவிர... 23 சார்பு அணிகளிலும் சேர்த்து மொத்தமாக மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட... இளைஞரணி, தகவல் தொழில்நுட்ப அணி, மருத்துவர் அணி போன்ற அணிகளில் ஊராட்சி கழகம் வரையிலும் உள்ள மொத்த நிர்வாகிகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 6 லட்சம் பேர் இருக்கின்றார்கள்..!

இதையும் தவிர 234 தொகுதிகளிலும் உள்ள அத்தனை வாக்குச்சாவடிகளிலும் கிட்டத்தட்ட 8 லட்சம் பேர் பாக முகவர்களாக பயிற்சி பெற்று தயார் நிலையில் இருக்கின்றார்கள்...!

அதாவது சற்றேறக்குறைய 25 லட்சம் பேர்... அதாவது கால் கோடி பேர் திராவிடமுன்னேற்ற கழகத்தின் பல்வேறு அமைப்புகளில் நிர்வாகிகளாக, பொறுப்பாளர்களாக மட்டுமே இருக்கின்றார்கள்..!

இவை அனைத்தையும் கடந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும்...

**இன்னும் சொல்லப்போனால் கந்த ஓராண்டில் தி.மு.க. உறுப்பினர்களின் எண்ணிக்கையை 100 சதவிகிதம் அதாவது ஒரு மடங்கு உயர்த்தி... மூன்று மாதங்கள் முன்பாக 2 கோடி தி.மு.க. உறுப்பினர்கள் என்ற இலக்கையும் தலைவர் தளபதியார் சாதித்துக் காட்டியுள்ளார்..!**

**இந்த உறுப்பினர்கள் எல்லாம், ஏதோ பா.ஜ.க. மிஸ்ட் கால் கொடுத்து சேர்க்கப்பட்டது போல் அல்ல. மாறாக ஒவ்வொரு உறுப்பினரும் தலைமைக் கழகத்தால் அவரவரது தனி அலைபேசியில் தொடர்புகொள்ளப்பட்டு வெரிஃபை... அதாவது சரிபார்க்கப்பட்டவர்கள். இதில் ஒரே ஒரு போலி உறுப்பினர் சேர்க்கப்பட்டிருந்தாலும் கூட சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர கழக செயலாளர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள்..!**

**தமிழ்நாட்டில் உள்ள கிட்டத்தட்ட ஐந்தரை கோடியிலிருந்து 6 கோடி வாக்காளர்களில் ஐந்து சதவிகிதம் பேர் தி .மு. கழகத்தின் அதி தீவிர கட்சி நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்களாவே இருக்கின்றனர்.**

அவர்களையும், அவர்களுடைய குடும்பத்தினரையும் உள்ளடக்கி மொத்தம் 2 கோடி வாக்காளர்கள் தி.மு..கவின் உறுப்பினர்களாகவே இருக்கின்றார்கள்... அதாவது மொத்த வாக்காளர்களில் இவர்களின் எண்ணிக்கை சற்றேறக்குறைய 33 சதவிகிதமாகும்..!

மேலே நான் சொல்லியிருப்பது தி.மு.க வின் வாக்கு வங்கி அல்ல.... மாறாக இது தி.மு.க. வினரின் எண்ணிக்கை அல்லது சதவிகிதம்..! அதாவது ஒரு தொகுதியில் வாக்குப்பதிவு முடிந்து வாக்கு எண்ணிக்கை துவங்கினால்...

**தி.மு.க. தனது கணக்கை 70 ஆயிரம் வாக்குகளில் இருந்து தான் துவங்கும். இந்த ஒரு இலக்கினைத் தான், கழக உட்கட்டமைப்பை... மிக மிக மிக துல்லியமாகவும், நுணுக்கமாக வும்... நேர்த்தியுடனும், மிகச் சரியான திட்டமி டலுடனும் செயல்படுத்தி... அதற்கு முன்பு இருந்ததை விட 100 சதவிகிதம் அதாவது முப்பத்தை யாயிரம் வாக்குகளில் இருந்து 70 ஆயிரமாக, தான் தலைவராக பொறுப்பேற்ற ஐந்தே ஆண்டுகளில் தலைவர் தளபதியார் அவர்கள் உயர்த்தியுள்ளார்..!**

ஆனால் அதிமுகவோ, ஜெயலலிதா விட்டுச் சென்ற நிலையிலேயே... அதாவது 35 ஆயிரம் என்ற நிலையிலிருந்து ஒரு படி கூட முன்னேறாமல்...

அதே சமயம்... திமுக தலைவரின் அதிரடி பாய்ச்சலால், அதிமுக தனது மினிமம் பெஞ்ச் மார்க் நிலையையும் இழந்து நின்று கொண்டிருக்கின்றது என்பது தான் இன்றைய கள நிலவரம் மற்றும் யதார்த்தம்..!

தலைவர் தளபதியார் அவர்கள் ஒரு மார்க்கத்தில் கூட்டணிகளை கட்டமைத்து, திட்டமிட்ட அரசியல் பரப்புரைகளை மேற்கொண்டு தொடர் தேர்தல் வெற்றிகளை குவித்து தொண்டர்களை உற்சாகப்படுத்தி...

அந்த உற்சாகத்தின் மூலம் கிடைத்த நம்பிக்கையின் காரணமாகவே... தளபதியார் அவர்கள், கழக உட்கட்டமைப்பை பலப்படுத்த எடுத்த முயற்சிகள் அனைத்திற்கும் தொண்டர்கள் முழுமையான ஒத்துழைப்பையும், கடும் உழைப்பையும் கொடுத்து சாத்தியமாக்கினர்..!

தொலைநோக்குத் திட்டமாக...

திராவிட முன்னேற்றக் கழகத்தை தமிழ்நாட்டில் 50 சதவிகிதத்திற்கும் கூடுதலாக வாக்குகள் பெற்று வெற்றிபெறக் கூடிய நிலையில் இன்றைக்கு கொண்டுவந்து நிறுத்தியிருக்கின்றார்..!

தளபதி அவர்கள் தலைவராகப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டு காலத்தில் தி.மு.கழகத்தின் சித்தாந்த எதிரியான பா.ஜ.க.வின் ஹெச். ராஜா இவரை 'ஸ்டாலின் இஸ் மோர் டேஞ்ஞரஸ் தென் கலைஞர் என்று கூறி... தளபதியாரின் ஆளுமையை அடையாளப்படுத்தியது எல்லாம் பழங்கதையாகிப் போய்...

**இப்பொழுது, ஆர். எஸ். எஸ். துவங்கிய காலத்திலிருந்து அதன் கொள்கைகளை எந்த தடையுமில்லாமல் கடந்த 9 ஆண்டுகளாக நிறுவிக் கொண்டிருக்கும் ஒன்றிய பிரதமரே... அதாவது 'டிமோ'வே இந்தியாவில் தான் எங்கு சென்றாலும், தி.மு.க. தலைவரை விமர்சித்து விட்டுத்தான் தன் பிரச்சாரத்தை நிறைவு செய்கின்றார் என்றால்...**

தி.மு.க. தலைவராக தளபதியார் அவர்களின் வெற்றி வீச்சு என்பது எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்..!

'டிமோ' ஏன் தி.மு.க. தலைவரைப் பார்த்து அலருகின்றர் என்பதை தனி ஆராய்ச்சிக் கட்டுரையாகவே அடுத்து நாம் பதிவு செய்யலாம்..!

ஆகவே கழக தலைவராக தளபதியார் அவர்களின் செயல்பாடு என்பது சந்தேகமே இல்லாமல் அடிமுடி காண இயலாத விஸ்வரூபம்..!

# கடலூர் மாவட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்ற நிகழ்ச்சிகள்!



கடலூரில், நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட அளவிலான அரசு ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை தந்த போது, கடலூர் மேற்கு மாவட்டக்கழகம் சார்பில் விருத்தாச்சலம் கடைவீதி பாலக்கரை பகுதிகளில் ஆயிரக்கணக்கானோர் திரண்டிருந்து உற்சாகமிகு வரவேற்பளித்த காட்சி!





தி.மு.கழக இளைஞர் அணியின் 2ஆவது மாநில மாநாட்டின் ஏற்பாட்டுக்காக மாவட்டந்தோறும் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்று வருகிறது. 10ஆவது கூட்டமாக கடலூர் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களுக்கான செயல்வீரர்கள் கூட்டம் வேப்பூர் கழுதாரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக இளைஞர்அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார். அமைச்சர்கள் – மாவட்டச் செயலாளர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சி.வெ.கணேசன் உள்ளிட்டோர் மேடையில் உள்ளனர். இந்திய ஒன்றியத்தின் பன்முகத்தன்மையை காப்பதற்கான போரில், கழகத்தின் வாளும் கேடயமுமாக திகழும் நம் இளைஞர் அணி மாநாட்டை வெல்லச் செய்வோம்! 2024 மக்களவைத் தேர்தலுக்கான திசைவழியை தீர்மானிக்க, டிசம்பர் 17 அன்று சேலத்தில் சங்கமிப்போம்! என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியின் போது, வருவாய்த்துறை, மகளிர் திட்டம், வேளாண் துறை, மாற்றுத்திறனாளிகள் நலன், சமூக நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன், மக்கள் நல்வாழ்வுத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் ரூ.15 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 909 பயனாளிகளுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சி.வெ.கணேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் சபா ராஜேந்திரன், கோ. அய்யப்பன், தி.வேல்முருகன், சிந்தனைச் செல்வன் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.

### அம்பத்தூர் ஆவின் வளாகத்தில்

## அமைச்சர் த.மனோதங்கராஜ் மரக்கன்றுகள் நட்டார்!

### பசுமை வளாகமாக மாற்ற நடவடிக்கை!

சென்னை, ஆக.31-

பால்வளத்துறை அமைச்சர் த.மனோதங்கராஜ் நேற்று முன்தினம் (29-08-2023). அம்பத்தூர் ஆவின் வளாகத்தை பசுமை வளாகமாக மாற்ற மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் நேற்று முன்தினம் 29-08-2023. அம்பத்தூர் பால்பண்ணை வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்து பண்ணை வளாகத்தை பசுமையாக மாற்ற நடவடிக்கை மேற்கொண்டார். பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் பால்வளத்துறை அமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து பல்வேறு நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறார். ஏற்கெனவே பால் பண்ணை வளாகங்களை பசுமைமிக்க வளாகங்களாக மாற்றி அமைக்க வேண்டும் என்று கூறி இருந்தார்.

அதை நடைமுறைப்படுத்தும் விதமாக நேற்று முன்தினம் (29-08-2023) அம்பத்தூர் ஆவின் வளாகத்தை பசுமை நிறைந்த வளாகமாக மாற்ற மரக்கன்றுகளை நட்டு தொடங்கி வைத்தார். மொத்தம் ஆயிரம் மரக்கன்றுகள் நடுவதற்கு திட்ட மிடப்பட்டுள்ளது. அதில் புங்கை, பூவரசு, இலுப்பை, மகிழம், நாவல், மருதம், நாட்டு அத்தி உட்பட 16 க்கும் மேற்பட்ட வகைகள் அடங்கும்.




**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் திருநங்கைகள் நல வாரியம்!**



# இடம் பொருள் கலைஞர் 33



# திருநங்கைகள் நல வாரியம்!

## இந்தியாவுக்குச் சமத்துவப் பாடம்!

**2021**-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ஓர் அறிவிப்பை பத்திரிகைகளில் வெளியிட்டது.

அதில், 'திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம் 2020 பிரிவு -10 (1)-ன் படி, திருநங்கைகளின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாக்கவும், அரசால் உருவாக்கப்படும் திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்களைப் பெற உதவும் வகையிலும், சம்பந்தப்பட்ட மாநில அரசு திருநங்கைகள் நல வாரியத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது குறித்தும் உரிய நடவடிக்கை எடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் 09.10.2020 அன்று அனைத்து மாநில அரசுகளுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருநங்கைகள் மீது பாரபட்சம் காட்டுவதிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவும், அவர்களது நிலையை உயர்த்தவும், ஒன்றிய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம் 2019-ஐ நிறைவேற்றியது. இந்தச் சட்டம் 2020, ஜனவரி 10-ஆம் தேதி அன்று நடைமுறைக்கு வந்தது" என அந்த அறிவிப்புச் சொன்னது.

### முன்னோடி முதல்வர்

மாநில அரசுகளே வாரியத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற கருத்துக்கு ஒன்றிய அரசு வருவதற்கு 12 ஆண்டுகளுக்கு முன்னரே திருநங்கைகளுக்கான வாரியத்தை உருவாக்கி, **'சமத்துவம் மிக்கது தமிழ்நாடு'** என இந்தியாவுக்கே அடையாளம் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

திருநங்கைகளும் இந்தச் சமுதாயத்தின் அங்கம் என்பதை உணர்த்தும் விதமாகவும், அவர்களின் நலன்களை உறுதி செய்வதற்காகவும் 2008-ஆம் ஆண்டில் ஏப்ரல் 15 -ஆம் தேதி அன்று 'தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரிய'த்தைத் தொடங்கி வைத்தார் கலைஞர்.

### நிதி ஒதுக்கீடுகள்

தொடங்கியது மட்டுமல்ல, அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையில், அவர்களுக்குப் பல்வேறு நலத் திட்ட உதவிகளையும் கழக அரசு வழங்கியது. அந்த நல வாரியத்தின் மூலமாக 3,878 பேர் கணக்கெடுக்கப்பட்டு, அவர்களில் 2,328 பேருக்கு அடையாள அட்டைகளும், 1,238 பேருக்குக் குடும்ப அட்டைகளும், 133 பேருக்குத் தொகுப்பு வீடுகளும், 100 பேருக்குத் தையல் இயந்திரங்களும், 482 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்களும், 585 பேருக்கு கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மருத்துவ அட்டைகளும் கலைஞர் ஆட்சிக் காலத்திலேயே வழங்கப்பட்டன. அதற்கென முதற்கட்டமாக 2009-ஆம் ஆண்டில் ரூ.50 லட்சமும், 2010-ஆம் ஆண்டில் ஒரு கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்தார்.

40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற ஏழைத் திருநங்கைகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்கவும் வழிவகை செய்தார்.

> முடங்கிக் கிடந்த இந்த நலவாரியத்துக்கு கழக அரசு பொறுப்பேற்றதும், 12 திருநங்கைகள் மற்றும் ஒரு பெண் உட்பட 13 அலுவல் சாரா உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். திருநங்கைகளுக்கான ஓய்வூதியம் ரூ.1,500 ஆக உயர்த்தப்பட்டது.

### பெயர் மாற்றம்

திருநங்கையர்க்கான நலவாரியம், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முயற்சிகளுடன், சமூகத்தின் புழக்கத்தில் உள்ள 'அரவாணிகள்' என்கிற பெயரினை மாற்றும் முயற்சியைச் செய்தவரும் கலைஞரே. இது தொடர்பாக, சட்டப்பூர்வ வடிவங்கள் மூலம் திருநங்கைகள் / திருநம்பிகள் என அடையாளப்படுத்தினார். விண்ணப்பப் படிவங்களில் ஆண்/பெண் என்பதற்கு எவ்வாறு 'M/F (Male/Female)' என்று அச்சிடப்பட்டிருக்குமோ அதைப்போல, திருநங்கையர்களை (TRANSGENDER) குறிக்கும் வகையில், 'T' என்ற எழுத்தினை முதன்முதலில் குறிப்பிட்டது கலைஞரின் ஆட்சி.

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் எடுக்கப்பட்ட இந்த முன்னெடுப்புதான் இந்தியாவுக்கே முன்மாதிரி. இதுகுறித்து 16-3-2008 அன்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஆங்கில நாளிதழ், *"Third Sex gets its due in T.N. - Karuna Govt. is Country's First to issue Ration Cards with 'T' as Gender"* என்ற தலைப்பில் பெரிதாக எழுதியிருந்தது. ஆனால், ஒன்றிய அரசு அதை உணர்ந்து கொள்வதற்கு காலம் பிடித்தது.

### மாநிலங்களவையில் மசோதா

2013-ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் ஆறாவது பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணிகள் நடந்தபோது, அந்தப் படிவத்தில் திருநங்கையர்களுக்கு 9 என்ற குறியீட்டு எண் வழங்கப்பட்டபோது, கலைஞரிடமிருந்து கடும் எதிர்ப்பு எழுந்தது. அந்தப் படிவத்தில் ஆண் என்பதற்கு 1 என்றும், பெண் என்பதற்கு 2 என்றும் குறிப்பிட்டு விட்டு, ஆண் பெண் அல்லாத பாலினப் பிரிவுக்கு 9 என்ற குறியீட்டு எண் பயன்படுத்தப்பட்டது. "ஏற்கனவே எங்களை அந்த 9 என்ற எண்ணைக் குறிப்பிட்டுத்தான் கிண்டல் செய்கிறார்கள், இப்போது அரசே எண்ணை குறிப்பிட்டிருப்பது எங்களை அவமானப்படுத்துவதாக உள்ளது" என திருநங்கைகள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

> **சமூகத்தின் புழக்கத்தில் உள்ள 'அரவாணிகள்' என்கிற பெயரினை மாற்றும் முயற்சியைச் செய்தவரும் கலைஞரே.**

ஒன்றிய அரசின் இந்தப் பார்வையை மாற்றவும், கழகம்தான் முன் நின்றது. இது தொடர்பாக கலைஞர் அறிக்கை வெளியிட்டதுடன், ஒன்றிய அரசின் சட்ட வடிவங்களுக்கும் முனைப்பு கொடுத்தார். அதையடுத்து, 2014 -ஆம் ஆண்டில், மாநிலங்களவையில் கழகத்தின் உறுப்பினர், திருச்சி சிவா தாக்கல் செய்த, திருநங்கைகள் உரிமைகள் மசோதா ஏற்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### தொடர் செயல்பாடு

திட்டத்தைத் தொடங்குவது மட்டுமல்ல, ஆட்சியில் இல்லையென்றாலும் அந்தத் திட்டம் எந்தத் திசையில் செல்கிறது என்பதை, கண்காணிப்பதைத் தனது கடமைகளில் ஒன்றாகவே செய்தவர் கலைஞர். அவருக்குப் பின் வரும் ஆட்சியர்கள் அந்தத் திட்டத்தை முடக்கும்போது அவரைப்போல வருத்தம் கொள்வோர் எவருமில்லை. திருநங்கைகள் நல வாரியத்திலும் இதுதான் நிகழ்ந்தது.

கலைஞர் கொண்டு வந்ததால் அதை முடக்க வேண்டும் என நினைக்கும் அ.தி.மு.க. ஆட்சியில் திருநங்கைகள் நல வாரியம் செயல்படவே இல்லை. 2015-2016 -ஆம் ஆண்டுக்கான சமூக நலத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பின் செயல் திட்டத்தின்படி திருநங்கைகள் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கல்விக் கடன் போன்றவை வழங்கப்படவே இல்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி கிடைத்த பதிலில், இரண்டு பேருக்கு மட்டுமே அந்தக் கடன் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டிருந்தது. கலைஞர் முன்னெடுத்ததால் திருநங்கை / திருநம்பி என்கிற பெயரையே மாற்றி, மூன்றாம் பாலினம் எனக் குறிப்பிடத் தொடங்கியது அ.தி.மு.க. அரசு. இது சமத்துவமற்ற சொல் என்பதை அறிந்துகொள்வதற்கு அவர்களிடம் ஆற்றல் இல்லை.


அப்போது, அது தொடர்பாக 2015-ஆம் ஆண்டு நவம்பர் 10- ஆம் தேதி 'தி இந்து' ஆங்கில நாளிதழ், மிகப் பெரிய அளவில் அரைப் பக்க அளவுக்குச் சிறப்புச் செய்தித் தொகுப்பு வெளியிட்டது. அதற்குத் தலைப்பே, நாட்டிற்கே முன்மாதிரியாக இருந்த நல வாரியம், முடக்கப்பட்டுள்ளது என்றது. (*Transgender Welfare Board in a limbo - Once a model for the country, the Board has been inactive for the past few years: former members*- உறுதியற்ற நிலையில் அரவாணிகள் நல வாரியம் - ஒரு காலத்தில் நாட்டுக்கே முன்மாதிரியாக இருந்தது - கடந்த சில ஆண்டுகளாக வாரியம் செயல்படாமல் உள்ளது)

இந்தக் கட்டுரையைக் குறிப்பிட்டும் அரசுக்கு அழுத்தம் கொடுத்தார் கலைஞர். இப்படித் தனது காலம் வரை சமத்துவத்துக்கும், ஒடுக்கப்பட்டவர்களின் உத்தரவாதமான வாழ்க்கைக்கும் ஒளியாக நின்றவர் கலைஞர். அந்த ஒளிதான் விடியல் அரசின் ஆதாரம்.

...வலம் வருவோம்

---

## நூற்றாண்டுக்கு வலு சேர்க்கும் நூல்!




கலைஞரை அறிந்துகொள்ள ஓராயிரம் நூல்கள் வரிசையில், வாசகர்கள் மொழியில் எழுதப்பட்ட நூலாகத் தனித்துத் தெரிகிறது **'திராவிடத் திருமகன்'** நூல்.

69 தலைப்புகளின் கீழ், சிறு சிறு குறிப்புகள் போல எழுதப்பட்ட தகவல்கள் எளிதாக வாசிக்கவும், எடுத்துக் கையாளவும் பயன்படும் வகையில் உள்ளன. கலைஞரின் எழுத்துகள், ஆட்சிப் பணித் திட்டங்கள், அரசியல் வாழ்க்கை என அவரின் 80 ஆண்டு கால பொது வாழ்க்கை குறித்த இந்தத் திரட்டு நூலை எழுதியவர் வானம்பாடி வெ.சுப்பிரமணியன். சேலம், ஆத்தூரைச் சேர்ந்த 'தமிழினி பதிப்பகம்' வெளியிட்டுள்ளது.

கலைஞரின் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தை உயர்த்திப் பிடிக்க வலுசேர்க்கிறது இந்த நூல். வாசித்து மகிழ்வோம்.

## :ப்ளாஷ்பேக்



இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## ஆறுதலும் ஊக்கமும்!



சேதுராமன்

எனக்கு விவரம் தெரிந்த வயதிலிருந்து, இன்று வரை 56 ஆண்டுகள் கழகப் பணியாற்றி வருகிறேன். 1994-ஆம் ஆண்டு கழகம் சந்தித்த நெருக்கடியின் போது இன்றைய கழகத் தலைவரும் அன்றைய இளைஞர் அணி செயலாளருமான தளபதி அவர்களை தேனாம்பேட்டை அன்பகம் அலுவலகத்தில் சென்று சந்தித்து ஆதரவைத் தெரிவித்தோம். என்னுடன் அன்றைய ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் திரு கோ.தளபதி அவர்களும் உடனிருந்தார். அந்த சந்திப்பின்போது தளபதி அவர்கள் "கழகம் கட்டுக்கோப்பாக இருக்க எத்தகைய தியாகத்தையும் செய்ய நாம் தயாராக இருக்க வேண்டும்" என்று ஆறுதல் வார்த்தைகளைக் கூறி ஊக்கமளித்தார்..

**-எஸ்.சேதுராமன், மாநில துணைச் செயலாளர், விவசாயத் தொழிலாளர் அணி, மதுரை.**


## கருவூலம்

### புதுவை அரசியல் மாற்றம்!

**1967-ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றம், 1969-ஆம் ஆண்டு புதுச்சேரியிலும் ஏற்பட்டது. அதற்கு, முன் 'காலையில் ஒரு முதல்வர் – மாலையில் ஒரு முதல்வர்' என நிலையற்ற ஆட்சி நீடித்து வந்தது. அந்த நிலையில், முதல் முறையாக, புதுவையில் நிலையான ஆட்சியைத் தந்தது கழகம் – கம்யூனிஸ்ட் கூட்டணி ஆட்சி. இந்த வெற்றிக்கு இந்திய முஸ்லிம் லீக் துணை நின்றது. கழகத்தைச் சேர்ந்த எம்.ஓ.ஹெச்.பரூக் முதல்வராகப் பொறுப்பேற்றார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 226




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131